Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 தை 22 திங்கட்கிழமை (04.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 127











# இலங்கைக்கு எதிரான தீர்மானம் உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை

## அரசாங்கம் அறிவிப்பு

ஜெனிவாவில் இந்த மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீர்மானமொன்றை நிறைவேற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்தத் தீர்மானம் குறித்து எவ்வித தகவல்களும் உத்தியோகபூர்வமாக வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார். யுதத்தின். பின்னர் இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தியை எட்டியுள்ளது. ஒரு குறுகிய காலத்தில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

பல்வேறு நாடுகளினாலும் பிரயோகிக்கப்பட்டுவரும் அழுத்தங்கள் தொடர்பில் இலங்கை அறிந்து கொண்டுள்ளதாகவும், இலங்கை பற்றி பிழையான எண்ணங்களை ஆதாரங்களாலும் புள்ளிவிபரங்களிலும் முறியடிப்பதற்கு இலங்கை தயாராகிவிட்டது எனவும் கருணாதிலக்க அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

## இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த இளைஞனொருவரைக் காணவில்லையென யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குருநகர் கடற்கரை வீதியைச சேர்ந்த மக்மன் - பிரதீபன் (வயது - 17) என்ற இளைஞனையே கடந்த 29 ஆம் திகதி முதல் காணவில்லையென

(19) ஆம் பக்கம் பார்க்க

## வெட்டுப்புள்ளி அடுத்த வாரம்

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உயரதரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை அடுத்த வாரம் வெளியிடவுள்ளதாக பல்கலைகழக மானியங்கள் ஆணைககுழு அறிவித்துள்ளது. இதற்கான அனைத்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க தீர்மானத்தை ஆதரிப்பதா? முடிவில்லை என்கிறது ஐரோ. ஒன்றியம்



எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டுவந்தால் அதனை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது தொடர்பாகத் தாம் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லையென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பெர்ணாட் சாவேஜி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

மனித உரிமைப் பேரவையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தலிபான், அல்கொய்தா மீதான தடை இலங்கை முஸ்லிம்களை பாதிக்கும்

### என்கிறது முஸ்லிம் கவுன்ஸில்

தலிபான் மற்றும் அல்கொய்தா அமைப்புக்களை தடை செய்வது என அரசாங்கம் எடுத்துள்ள முடிவை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென இலங்கை முஸ்லிம் கவுன்ஸிலின் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் நேற்றைய தினம் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியது. அந்தச் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.



முஸ்லிம் சமூகத்தின் கலாசார அம்சங்கள் குறித்து தவறான கருத்துக்களை வெளியிடுவதை அனைவரும் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரும் வகையில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்புக்கு அந்த கவுன்ஸிலின் தலைவர் என்.எம்.அமீன் தலைமை தாங்கினார்.

இப்படியான தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதன் மூலம், முஸ்லிம்களுக்கும், ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக அமீன் எச்சரித்தார்.

குறிப்பாக, ஹலால் சான்றிதழ்கள் வழங்கும் நடைமுறைகள் குறித்து சில அமைப்புக்களால் அண்மைக்காலமாக சில தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதாக அங்கு அமீன் விளக்கினார். அந்தச் சந்திப்பின்போது பேசிய ஜனாதிபதி சட்டத்தரணியான

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை ஆணைக்குழுவில் அரசுக்கு எதிராக நடவடிக்கை

### கோருகிறது கூட்டமைப்பு

தென்னாபிரிக்காவின் விஜயத்திற்கும் இலங்கை அரசாங்கத்துடன் நாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்கும் தொடர்பில்லை. இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் தீய நோக்கங்களை கைவிடச் செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தவும் ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணைக் குழுவில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுககுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது. தென்னாபிரிக்க விஜயம் தொடர்பாக கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் அத்துமீறல் நாச்சிக்குடாவில் ஆர்ப்பாட்டம்



இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களின் அத்துமீறல மற்றும் சட்டவிரோத மீன்பிடி ஆகியவற்றைக் கண்டித்து மன்னார், முழங்காவிலில் இருந்து நாச்சிக்குடா வரையான மீனவர்கள் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி முள்ளிக்குளம் கடற்கரையில் இருந்து கண்டனப் பேரணியொன்று ஆரம்பமானது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் அரச காணி பயன்பாடு ஆளுநரின் அனுமதி அவசியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள அனைத்து அரச காணிகளையும் பயன்படுத்துவது தொடர்பில் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் விசேட அனுமதியைக் கட்டாயம் பெறவேண்டும் எனவும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நடைமுறைகளை அமுல்படுத்துவதாகவும் ஆளுநர் அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறை தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்று நிருபக் கடிதம் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்ட செயலாளர்களுக்கும், சகல பிரதேச செயலர்களுக்கும், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள அரச காணிகளை பயன்படுத்துதல், வாடகை, குத்தகைக்கு, முதலீடுகளுக்காக

(19) ஆம் பக்கம் பார்க்க

# உள்ளூர் றோலர் தொழிலாலும் பாதிக்கப்படுகின்றனர் மீனவர்கள்

இந்திய றோலர் படகுகளினால் மட்டுமன்றி உள்ளூரிலே அரசியல்வாதிகள் மற்றும் செல்வாக்குப் படைத்தவர்களின் பின்னணியிலும் மீன் பிடிப்பதற்காக றோலர் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதனாலும் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் மீன்வளம் அழிக்கப்படுவதைக் கண்டித்து போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பின் ஏற்பாட்டிலான முள்ளிக்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரையான நடைபவனி நேற்று கிளிநொச்சியை வந்தடைந்தது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடத்தல்தீவு மக்கள் மிகப் பெருமளவில் திரண்டுவந்து தங்களது ஆதங்கங்களை வெளிப்படுத்தியிருந்தார்கள். இந்திய றோலர்களுடன் உள்ளூர் றோலர் வைத்திருப்போரால் தங்களது வலைகள் உட்பட பல பொருட்கள் இலட்சக்கணக்கில் அழிந்துள்ளன. இக்கிராமத்தில் மாத்திரம் கடந்த வருடம் 25 கோடிக்கும் அதிகமான கடற்றொழில் உபகரணங்கள் அழிந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

பேரணிக்கு தங்களுடைய ஆதரவை தெரிவித்த மக்களின் சோகக் கதைகளை எம்மால் கேட்கக்கூடியதாகவிருந்தது. கிளிநொச்சி இரணைமாதா கிராமத்தில கடற்றொழில் உபகரணங்களைக் கொண்டு தொழில் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சால் நண்டு பதப்படுத்தும் தொழிற்சாலையொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அது 200 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய மிகப்பெரிய தொழிற்சாலை. இத்தொழிற்சாலைக்கு நண்டுகளை கொள்வனவு செய்ய முடியாதிருக்கின்றது. கடலுக்குச் சென்று தொழில் செய்ய முடியாதிருப்பதே இதற்கான காரணமாகும். இதனால் இத்தொழிறசாலை இன்று இயங்காமலுள்ளது. இங்குள்ள மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களுககாக பெற்ற கடன்களை எவ்வாறு கட்டுவதென்று தெரியாது இருக்கின்றார்கள்.

இவற்றுக்கெல்லாம் காரணம் இந்திய மீனவர்களின் அத்துமீறலும் அவற்றைக் காரணம் காட்டி அரசியல்வாதிகள், அரசியல் பின்புலமுள்ளவர்களால் நடத்தப்படும் சட்டவிரோத உள்ளூர் றோலர் மீன்பிடியாகும்.

இவற்றோடு இலங்கையிலே சிறந்த நண்டுக்கு பெயர்போன வடமாகாணத்திலே நாச்சிக்குடா கடற்கரைப்பகுதியில் நண்டின் பெருக்கம் மிக மிக குறைந்து போயுள்ளது. இதற்கு காரணம் அங்குள்ள இயற்கை வளங்கள் றோலர்களால் அழிக்கப்பட்டுள்ளதேயாகும்.


மேலும் இப்போராட்டம் ஆரம்பிப்பதற்கு முதல் இது அரசியலுக்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தமையால் சகல தரப்பினருக்கும் ஆதரவு தருமாறு கேட்டிருந்தோம். ஆனால் இது வரை எவரும் ஆதரவு தரவில்லை. அதை விட நாம் மக்களுக்காக இப்போராட்டத்தை செய்யும்போது பொய்யான பரப்புரைகளை செய்து போராடடத்தை முறியடிக்கச் செய்தார்கள். எனினும் மக்கள் விழிப்புணர்வு கொண்டுள்ளமையால் அது சாத்தியமற்றுப் போயுள்ளது. அதன் காரணமாக மக்களினுடைய ஆதரவு நூற்றுக்கு நூறு வீதமாக உள்ளது என்றார்.

# யாழ். ஐந்துசந்தியில் சுதந்திரதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள ஐந்துசந்தியில் 65 ஆவது சுதந்திர தினவைபவம் இன்று காலை கொண்டாடப்படவுள்ளது. யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை உதவிமேயர் எம்.எம்.ரமீஸ் கொடியேற்ற நிகழ்வை ஆரம்பித்துவைப்பார் சம்மேளனத்தின் தலைவர் எம்.ஆர். நிலாம் பள்ளிவாசல் நிர்வாகிகள், சமூக சேவையாளர்கள் எனப்பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஒழுங்கமைப்பை யாழ். முஸ்லிம் உதவும் கரங்கள் வாலிபர்கள் மேற்கொண்டுள்ளனர். (105)



வட்டக்கச்சி பேருந்து தரிப்பு நிலையம் அண்மையில் கரைச்சி பிரதேச சபை தவிசாளரினால் நாடாவெட்டி திறந்து வைக்கப்படுவதையும் அருகில் வட்டக்கச்சி கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் நிற்பதையும் காணலாம். திரு. திருமதி பேரம்பலம் ஞாபகார்த்தமாக இப்பேருந்து தரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (45)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு 3 கிராமங்களுக்கு மின்சாரம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கிலுள்ள 3 கிராமங்களுக்கு இலங்கையின் சுதந்திரதினமான இன்று மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் செம்பியன்பற்று வடக்கு செம்பியன் பற்று தெற்கு, மாமுனை ஆகிய மூன்று கிராமங்களுக்குமே மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

மாமுனை அரசினர் த.க.பாடசாலைக்கு முன்பாகவுள்ள மின் பிறப்பாக்கியில் மின்விநியோகம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பனை அபிவிருத்திச் சபைத தலைவர் பசுபதி சீவரத்தினம் கலந்த கொண்டு மின்விநியோகத்தை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

மேலம் இந்நிகழ்வில் ஆசியுரையை பங்குத்தந்தை அருள் நேசன் அடிகளார் வழங்கவுள்ளார். இதில் இலங்கை மின்சாரசபை மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் என். திருலிங்கநாதன், இலங்கை மின்சார சபையின் வடமாகாண மின்அத்தியட்சகர் எஸ். இராஜேஸ்கரன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச சபையினால் இக்கிராமத்திலுள்ள வீதிக்கு 10 வீதி விளக்குகளுக்கும் பொருத்தப் படவுள்ளது. (01)

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

நெல்லியடியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் பேரின்பராஜா (வயது -50) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள தனது வீட்டின் முன் நின்ற மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் நெல்லியடி பொலிஸாரினால் மீட்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

# போக்குவரத்து பொலிஸாரின் பரிசோதனைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய ஆண்டு ஆரம்பத்தைத் தொடர்ந்து போக்குவரத்து பொலிஸாரின் பரிசோதனைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாண்டுக்கான வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன தற்போது பரிசோதிக்கும் நடவடிக்கைகள், நெடுஞ்சாலைகளில் மட்டுமல்ல குச்சொழுங்கைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு பொலிஸ்பிரிவுகளிலும் இந்நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை ஏ-9 வீதிப் போக்குவரத்தை கண்காணிக்கவென நெடுஞ்சாலைகள் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸ் பிரிவு என்ற புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவினால் ஏ-9 வீதியின் நெடுகிலும் பரிசோதனைகள், வேக கண்காணிப்பு என போக்குவரத்து விதிமுறைகள் கடுமையாக கண்காணிக்கப்படுகின்றது. இவ்வாறு போக்குவரத்து பொலிஸாரின் பிரசன்னத்திற்கு பின்னர் அதிகளவில் விபத்துக்கள் தவிர்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துவோர் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படுகின்றது. வேகக் கண்காணிக்கும் பொலிஸார் செம்மணி, நாவற்குழி, கைதடி கொடிகாமம், சாவகச்சேரி எழுதுமட்டுவாள் பகுதிகளில் வேகக் கண்காணிப்பை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# நம்பிக்கை மோசடி; கடத்தப்பட்ட கார் மீட்பு



(வடமராட்சி)

கொழும்பிலிருந்து நம்பிக்கை மோசடி செய்து கடத்திவரப்பட்ட சுமார் 65இலட்சம் பெறுமதியுடைய கார் ஒன்றினை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விசேட குற்றப்புலனாய்வுப் பொலிஸாரும் நெல்லியடி குற்றத்தடுப்புப் பொலிஸாரும் இணைந்து வடமராட்சி துன்னாலை பகுதிலுள்ள வீட்டிலிருந்து கைப்பற்றி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப்பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (18)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 - 06 - 1936 |  | 04 - 01 - 2013 |

**திதி:- 04.02.2013**

**அமரர் சின்னட்டி திருநாவுக்கரசு**

எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னட்டி திருநாவுக்கரசுவின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.02.2013) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினர் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 3/1
ஸ்ரான்லி கல்லூரிவீதி,
கச்சேரி கிழக்கு
அரியாலை. (R/096)

குடும்பத்தினர்.

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க முறையான வேலைத்திட்டங்கள் அவசியம்

—— யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ——

(யாழ்.நிருபர்)

பிள்ளைகள் பாடசாலைக்கும், ரியூசனுக்கும் மட்டுமின்றி வேறு எங்கு செல்கிறார்கள், யாருடன் பழகுகிறார்கள் என்பதைப் பெற்றோர் கவனிக்க வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் எமது சமூகத்திலிருந்து களையப்பட வேண்டுமானால் சமூகத்தில் பொறுப்புள்ள ஒவ்வொரு பிரஜையும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.



யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பிரபல எழுத்தாளர் டாக்டர் ஆ.பேரின்பநாதன் எழுதிய 'சிறுவர் துஷ்பிரயோகம்', 'மதுவும் அடிமைநிலையும்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று எமது பிரதேசத்தில் சிறுவர்துஷ்பிரயோகம் அதிகரித்து வருகிறது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு பலரும் தயங்குகின்றனர். இந்த விடயத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் சமூகப்பொறுப்புள்ளவர்களாக செயற்பட வேண்டும்.

மாவட்டரீதியாக சிறுவர், பெண்கள் நலன் பேணும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். பாதிக்கப்படுவோர் இவர்களின் ஊடாக தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். சிறுவர் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முறையான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். பிள்ளைகள் நல்லவர்களாக வழிப்படுத்துவதற்குப் பெற்றோர் தமது முழுமையான பங்களிப்பினை வழங்க வேண்டும்.

இளம் வயதுத் திருமணம், பாலியல் துஷ்பிரயோகம், பெண்பிள்ளைகள் காணாமற்போதல் போன்ற பல முறைப்பாடுகள் தினமும் வருகிறது. அரச உத்தியோகத்தர்களால் மாத்திரம் இவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது.

பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். ஆலயங்கள், பாடசாலைகளுக்கு அண்மையில் இயங்கும் மதுபானநிலையங்களும் மூடப்பட வேண்டும். புதிய மதுபான நிலையங்கள் திறப்பதற்கு அனுமதிக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார். (10)

# மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநரின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்தே 5 மாவட்டங்களின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கையளித்தார். இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# துவிச்சக்கர வண்டிகளுக்கு இலக்கத்தகடுகள்

(யாழ்.நிருபர்)

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களது துவிச்சக்கர வண்டிகளுக்கான 2013ஆம் ஆண்டுக்கான இலக்கத்தகடுகளை பாடசாலைகளினூடாக வழங்குவதற்கு யாழ்.மாநகர சபை முன்வந்துள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தமது துவிச்சக்கரவண்டிக்கான இலக்கத்தகட்டை அதிபர் ஊடாக அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ் மாநகரசபை தெரிவித்துள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள பாடசாலை அதிபர்களுக்கு இவ்விடயம் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டடுள்ளது. (10)

# இலவச கணனிப்பயிற்சி

(யாழ்.நிருபர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு விதாதா வள நிலையத்தில் இலவசமாக கணனிப் பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன.

இவ் இலவச கணனிப் பயிற்சிநெறிகள் வாரநாட்களில் நடைபெறுவதுடன் ஆறுமாத காலப்பயிற்சிநெறியாக வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியினைப் பின்பற்ற விரும்பும் இளைஞர் யுவதிகள் மற்றும் பாடசாலையை விட்டு விலகியோரும் கோப்பாய் பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)



**நீர்வேலி - சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது மாணவர்கள் சூரிய வணக்கத்தில் ஈடுபடுவதைக் காணலாம். (03)**

# யாழ்.விஞ்ஞான சங்கத்தினால் மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கடந்த காலங்களில் நடாத்திவந்தது பேர்ன்று இவ்வருடமும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை "சமூக வலுவூட்டலுககான கல்வி" என்ற கருப்பொருளுக்கு அமைய நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 8ஆம் திகதி காலை 11.00 மணிமுதல் 12.00 மணிவரை வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப்பரீட்சையும் 12.15 முதல் 01.15 வரை கட்டுரைப் போட்டியும் இடம்பெறவுள்ளன. இப் போட்டிகள், யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையிலும், மானிப்பாய் மறறும் புலோலி ஆசிரியர் வள நிலையத்திலும் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

14ஆம் திகதி காலை 10.00 முதல 4.00 மணிவரை விவரணபடப் போட்டி யாழ்.கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறை விஞ்ஞான பீடத்திலும், 15 ஆம் திகதி 10.00 மணிமுதல் 4.00 மணிவரை பேச்சுப்போட்டி யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்கைகள் பீட அலகிலும் நடைபெறவுள்ளன.

22 ஆம் திகதி பாடசாலை தோட்டப்போட்டி விண்ணப்பிக்கப்பட்ட பாடசாலைகளிலும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி காலை 9.30 மணிமுதல் 4.00 மணிவரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் கண்காட்சிப் போட்டி, சுவரொட்டி, சித்திரம், விஞ்ஞானபுத்தாக்கம் உள்ளடங்கலாக நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக கணக்கியியல் துறை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட உதவி பொதுச் செயலாளர் கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

# புனித லூர்து அன்னையின் வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - தும்பளை புனித லூர்து அன்னை யாத்திரைத் திருத்தலத் திருவிழா நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பங்குத் தந்தையும் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வருமான அருட்பணி ஜோன் மவுலிஸ் அடிகளாரினால் புனித லூர்து அன்னையின் திருவுருவக்கொடி ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

இறுதி நவநாளாகிய எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4.30 மணிக்குத் திருச்செபமாலையும், அதனைத்தொடர்ந்து திருப்பலியும், திருமறையுரையும் திவ்விய நற்கருணை ஆராதனையும், பவனியும் நடைபெறும்.

11ஆம் திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும், 7.30 மணிக்கு யாழ்.மறை மாவட்ட ஆயர் மேன்னைமிகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் கூட்டுப்புலியும் ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து புனித லூர்து அன்னையின் திருச்சுரூபப் பவனியும் இடம்பெறும்.

இத் திருத்தலத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (01,109)

# உயர்தரப் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

**யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

மகேந்திரராஜா கௌசிகா (3பி), தில்லைநாதன் சருபி (2 பி, சி), தியாகராஜா ரஜிதா (3சி).

**உயிரியல் பிரிவு**

செல்வராஜா தர்சிகா (3பி), சிறிரங்கநாதன் தர்சிகா (2பி, சி)

**வர்த்தகப்பிரிவு**

தவராஜா சாத்வீகா (2ஏ, பி), சண்முகநாதன் லாவண்யா (ஏ, 2பி), சுபாஸ்கந்தர் கிருசுபா (2ஏ, சி), இரகுநாதன் லாவண்யா (ஏ, 2சி), பஞ்சநாதன் ரேகா (3பி).

**கலைப்பிரிவு**

கிரிதரன் நிவேதா (ஏ, 2பி), பத்மநாதன் சரண்யா (ஏ, பி, சி), அரியரட்ணம் ஆரணி (2பி, சி), செந்தில்நேசன் கௌசிகா (2பி, சி), குமாரகுலசிங்கம், நிசாந்தினி (ஏ, 2சி), கணேஸ் சிறிவர்ணா (ஏ, 2சி), ஸ்ரீகாந்தா மகாஜினி (பி, 2சி), பிரான்சிஸ் பிரமிளா எலி சினி (2ஏ, எஸ்), நாகேந்திரம் துர்க்கா (2பி, சி), ஜெயராசா ஜனனி (2பி, சி), சொர்ணலிங்கம் நளினி (2பி, சி).

**ஹாட்லிக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

பா.கபிலன் (3ஏ மாவட்ட நிலை -1), எஸ்.கிருஷாந்த் (3ஏ மாவட்டநிலை -5), கே.செந்தாளன் (3ஏ மவட்டநிலை -7), பி.தஸ்மதன் (3ஏ), பி.பானுகோபன் (3ஏ), எஸ்.நிஷாந்தன் (3ஏ), ஜி.துஷாந்தன் (2ஏ, பி), எஸ்.சரத்பவன் (3ஏ), ரி.கஜன் (ஏ, 2பி), கே.சுதர்சன் (2ஏ, பி), கே.பிரசாந்த் (ஏ, 2பி), எஸ்.கமலக்கண்ணன் (2ஏ, சி).

**உயிரியல் பிரிவு**

எஸ்.இளங்கீரன் (3ஏ, மாவட்டநிலை 5), பி.துவாரகன் (2ஏ, பி), எஸ்.செந்தூரன் (2ஏ, பீ).

**வர்த்தகப்பிரிவு**

எஸ்.பரதன் (3ஏ), எம்.கோணேஸ்வரன் (3 ஏ), என்.தினேஸ் (2ஏ, பி), இ.அன்பரசன் (2ஏ, பி), கே.ராஜ்குமார் (ஏ, 2பி), எம். சேந்தன் (2ஏ, சி),

**கலைப்பிரிவு**

பி.சூர்யா (ஏ,பி,சி), எஸ். நந்தகுமார் (ஏ,பி,சி). (116,109)

(தொடரும்...)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சுதந்திரத்தை நேசிப்பது என்றால்...

இன்று ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை மக்கள் சுதந்திரம் பெற்ற நாள். சுதந்திரமாக வாழ விரும்புதல் எப்போதும் மனிதர்களிடம் இருக்கக் கூடிய அவாதான். ஆனால் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முறைகளும் மனித நாகரிக வளர்ச்சியோடு மாறி வர வேண்டியவை.

அடிமைப் புரட்சிக் காலத்துக் கோட்பாடுகளை இன்றும் சுதந்திரத்திற்கான கோஷங்களாக ஒப்புவித்துக் கொண்டிருக்க முடியாது. ஒன்றினது சுதந்திரம் மற்றையதன் சுதந்திரத்தை மறுதலிப்பதன் மூலமே அடையப்பட முடியும் என்று உணர்ந்திருந்தவை அன்றைய மனித உயிர்கள். நேருக்கு நேராக வாளால் வெட்டியோ துப்பாக்கியால் சுட்டுக்கொண்டோ, நீயா நானா உயிர் வாழ்வது என்று தீர்மானித்துக் கொண்ட காலம் அது.

நாம் விவேக மனிதர்களாக மேலும் மேலும் முன்னேறி வளர்ந்து வந்துவிட்டோம். இன்று, ஒருவர் இன்னொருவரை அடக்காமல், ஆனால் இருவரும் சேர்ந்து வாழ்வதற்குரிய வழிமுறையைக் கண்டு கொள்ளுதலே சுதந்திரத்திற்கான மனித ஏற்பாடாக இருக்க முடியும் என்று புரிந்துகொண்டிருக்கிறோம்.

எனது சுதந்திரம் இன்னொருவரைக் காயப்படுத்துவதாக இல்லாமல் நான் பெற்றுக்கொள்வதற்கு, பேச்சின் முறையும் வழியும் தெரிந்த நாகரிக மனிதர்களாகி இருக்கிறோம். வாழ்க்கையின் மீது கனவை ஏற்றி யதார்த்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஆவேசத்தையும் முரசங்களையும் நம்பிய காலத்தையும் கடந்து வந்துவிட்டோம்.

இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும் சுதந்திர தேவியைத் தொழுதிட மறக்கிலேனே என்கிற பாரதியின் உணர்வு எல்லோர்க்கும் இருப்பதுதான். ஆனால், சுதந்திரத்தையும் உரிமையையும் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளுக்கும், நாம் கடந்த காலத்தில் போய் நிற்க முடியாது. இன்றைய சூழலுக்கு ஏற்பத்தான் நாம் முயற்சிகளைச் செய்ய முடியும். இன்று நமது மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. பதுங்கு குழிகளுக்குள் பாயும் உயிர்ப் பய ஓட்டமில்லை.

இந்த நிலையில், “மக்கள் பருப்பும் அரிசியும் கேட்கவில்லை; சுதந்திரம்தான் கேட்கிறார்கள்” என்னும் தலைவர்களின் வாய் வீச்சு, மக்களைத் தியாகிகளாக்கிப் பிழைக்கும் ஏமாற்றுத்தான்! அவர்களைத் துயரங்களில் அழுத்திக் கதிரை அரசியல் செய்ய எண்ணும் குரூரம்தான்.

மக்களின் அன்றாடத் துன்பங்கள் தெரியாத, தங்களது வாழ்நிலையிலிருந்து இவர்கள் பேசுகிறார்கள். மக்களை மேலும் மேலும் கஷ்டங்களில் தள்ளுவதை மறைப்பதற்காக போதை வசனங்களை அவர்களுக்குத் தருகிறார்கள்.

மக்களுக்குச் சுதந்திர வாழ்வு கிடைப்பதைப் பறித்து, “சுதந்திரத்திற்காக இன்னுமின்னும் கஷ்டப்படுங்கள்” என்னும் ஆவேசப் பேச்சையே விதம் விதமாகத் தந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு மக்களின் துயர் கடுமையாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கொள்கைப்பிடிப்பு வெறியேற்றிக் கொண்டிருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

இவர்களிடமிருந்து நாம் மீள வேண்டும். மற்றவர்களைச் சகித்துக்கொள்ளல் என்பதே நமக்குத் தேவைப்படுகிற மிக முக்கியமான மனத்தயாரிப்பு. நமது இருப்பும் வாழ்வும் மகிழ்ச்சியும் மற்றவர்களின் இருப்பையும் மகிழ்வையும் ஏற்றுக்கொள்வதிலும், அழித்தொழித்தல் ஆவேசங்களின்றி ஏற்றுக்கொள்ள வைப்பதிலும்தான் இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

மற்றவர்களுடன் பன்மைத் தன்மையான ஒரு சூழலில் வாழ்வதற்கும் அதனால் இதம் பெறவுமான ஒரு மனோநிலையே நமது தேவை. இனத்தாலோ மொழியாலோ மதத்தாலோ கலாசாரத்தாலோ இன்னுமின்னும் நாம் காண்பித்துக் கொள்ளும் வித்தியாசங்களாலோ நம்மிடமிருந்து வேறுபடுகிறவர்களைத் தண்டிக்கும், அழிக்கும் உரிமையையோ ஆவேசத்தையோ எடுத்துக்கொள்ளாது, சேர்ந்து வாழ்தலை நாம் பழக வேண்டும்.

சுதந்திரத்தை நேசித்தல் என்பது இதுவாகத்தான் இருக்க முடியும்.

\- ஆசிரியர்

# மருந்துப்பொருட்களின் விநியோகம் உத்தரவிடும் அதிகாரம் யாரிடம்?

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு மீது கண்டனம்

(கொழும்பு)

மருந்து வகைகள் தொடர்பிலான விதிமுறைகளை அறிவிப்பதற்கான அதிகாரம் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு இல்லை எனத் தெரிவித்து மருந்து விநியோக நிறுவனங்கள் சங்கமொன்று கோரிக்கைக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

எவ்வாறாயினும் மக்கள் நலம் சார் விடயங்களில் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குவதற்கான உரிமை தமது ஆணைக்குழுவிற்கு உள்ளதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து மருந்து மேலுறைகளிலும் தேவையான தகவல்கள் மும்மொழிகளிலும் அச்சிட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் அரச கருமமொழிகள் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகள் தொடர்பில் சில மருந்து விநியோக நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் நடைமுறைப் பிரச்சினை எதிர்நோக்கப்படும் மருந்து வகைகளின் மாதிரிகளை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்குமாறும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மும்மொழிகளிலும் தகவல்களை உள்ளடக்குவதில் நடைமுறைப் பிரச்சினை காணப்படும் மருந்து வகைகளின் மாத்திரைகளை ஒருசில நிறுவனங்கள் அனுப்பிவைத்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# அசுரவேகத்தில் வாகனங்கள்; கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வாகனங்களின் அதிவேக விரைவினைக்கட்டுப்படுத்தும் நோக்குடனும், பாரிய விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாகவும் ஏ-9 வீதியில் வேகத் தடைகள் போடப்பட்டுள்ளதைப் பயணிகள் மற்றும் பாதசாரிகள், பொதுமக்கள் பலரும் வரவேற்றுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக, ஏ-9 வீதியில் உள்ள பாலங்களின் மீது செல்லும் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டை குறைக்கும் முகமாக பாலங்களின் அருகில் திண்ம வடிவில் காபற் இடப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் வீதியில் பயணிக்கும் வாகனங்களின் அதிவேகமான செயற்பாடுகள் குறைக்கப்படுவதோடு, ஆபத்துக்களும் தடுக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட இவ்வீதியில் அமைந்துள்ள பாலங்களில் இரும்புத் தகடுகள் நில விரிப்பாக பொருத்தப்பட்டுள்ளதால் பனி மற்றும் மழை காலங்களில் வழுக்கும் தன்மை காணப்படுவதோடு, அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வந்துள்ளன.

அண்மையில் கைதடி - நாவற்குழிப் பாலத்தின் மீது அதிவேகமாகப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று எதிரே வந்த வாகனமொன்றுக்கு விலகிக் கொடுக்கும் சமயத்தில் வழுக்கிய நிலையில், வீதிக்கு குறுக்காக விபத்துக்குள்ளாகி நின்றமையும், இதனால் பலமணி நேரமாகப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்து போனமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (138)

# அந்த குடிசையை நோக்கி முதற்பெண்மணி ஷிராந்தி

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றபட்ட பணிப்பெண் ரிசானா நபீக்கின், மூதூரிலுள்ள வீட்டிற்கு நாட்டின் முதற்பெண்மணியும் ஜனாதிபதியின் பாரியாருமான ஷிராந்தி ராஜபக்ஷ நேற்று நண்பகல் விஜயம் செய்துள்ளார்.

மூதூரிலுள்ள ரிசானா நபீக்கின் வீட்டிற்கு சென்ற ஷிராந்தி ராஜபக்ஷ, ரிசானாவின் குடும்ப நலன்களை விசாரித்தார். ஷிராந்தி ராஜபக்ஷவின் மூதூருக்கான விஜயத்தின் காரணமாக குறித்த பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளை சந்திக்க வாய்ப்பு

(கொழும்பு)

சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை உறவினர்கள் பார்வையிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துக் கைதிகளும் தமது உறவினர்களையும் நண்பர்களையும் சந்திப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பரிந்துரைகளை அமுல்செய்ய அதிகளவு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் செய்வதற்காக 1200 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

ஜெனிவாவில் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக 209 யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வாறு முன்வைக்கப்படவுள்ள 209 யோசனைகளில் 98 யோசனைகளை நிராகரிப்பது என இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு நிராகரிக்கப்படவுள்ள விடயங்களில் யுத்தக் குற்றம், சர்வதேச நீதிமன்ற விசாரணை, பாதுகாப்புத் தரப்பு ஆகியவையும் உள்ளடங்குவதாக அந்தச் செய்திகள் கூறுகின்றன. ஏனைய 111 யோசனைகளையும் இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இதேவேளை, ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் கலந்து கொள்ளும் நாடுகளில் 24 நாடுகள் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவுடன் சேர்ந்து செயற்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திர சதுக்கத்தில் சுதந்திரதின விழா

(கொழும்பு)


கொழும்பு மாவட்ட சுதந்திரதின விழா, இன்று காலை 8.30 முதல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வெகு விமர்சையாக நடைபெற வுள்ளது.

மேல் மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கள், மாகாண சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள், பிரதேச செயலர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பிரமுகர்கள் கலந்துகொள்வர் என மாவட்ட செயலாளர் எச்.டீ.கமல் பத்மசிறி தெரவித்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல பாடசாலைகளான றோயல் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, நாலந்தா கல்லூரி உட்பட 22 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறவுள்ளது.

கலாசார திணைக்களத்தின் கலாசார குழுவினரது கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவை அலங்கரிக்கவுள்ளதாக மாவட்டச் செயலாளர் கமல் பத்மசிறி மேலும் தெரிவித்தார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் புலம்பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை.**





# பங்கு பிரிப்புக்களும் படுகொலையும் 05

**சாத்திரி**

இங்கு நடந்ததுஎன்னவெனில், அனைத்துலக செயலகத்தினைத் தாக்கிய அனைவருமே புலிகள் அமைப்பின் புலனாய்வு மற்றும் சர்வதேச கட்டமைப்பில் பணி புணிந்தவர்கள். இவர்களிற்கும் அனைத்துலக செயலகத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. அனைத்துலகத்தோடு அவர்கள் எவ்வித தொடர்புகளையும் வைத்திருப்பதும் கிடையாது. அவர்கள் தனியாக தங்களது வேலைகளைப்பார்ப்பதோடு வெளிநாடுகளில் அனைத்துலகத்தை சேர்ந்தவர்கள் என்னென்ன தில்லு முல்லு நிதி மோசடிகள் செய்கிறார்கள் என்பதனையும் கண்காணித்து புலனாய்வுத்துறை தலைமைக்கு தெரிவித்தபடி இருப்பார்கள். இந்தத் தாக்குதல் நடந்ததுமே புலனாய்வுப் பிரிவில் இயங்கிய ஈசன் (வசாவிளான்) என்பவர் உடனடியாக நடந்த சம்பவம் பற்றி விபரமாக எழுதி அனைத்துலகத்தின் கடை மற்றும் அலுவலகத்தை தாக்கியதற்கான காரணங்களையும் எழுதி புலனாய்வு

**அனைத்துலகச் செயலகம் தங்களிற்குள் மாறி மாறி அடிபட்டுக்கொண்டு ஒருவரை மற்றவர் அவர்கள் இலங்கை அரசின் கைக்கூலிகள் என்றுகுற்றம் சாட்டுவது வழமையாக நடப்பது ஒன்றாகிவிட்டது.**

தலைமைக்கு அனுப்பி விட்டிருந்தார். அதே நேரம் தங்கள் அலுவலகத்தை இலங்கையரசின் கைக்கூலிகளும் இலங்கை புலனாய்வு பிரிவும் சேர்ந்து தாக்கிவிட்டார்கள் என்று இங்கு ஊடகங்களில் பிரசாரம் செய்த அதேவேளை, அதே பொருள்பட ஏழு பக்க அறிக்கை ஒன்றும் அனைத்துலகத்தால் தயாரிக்கப்பட்டு இயக்கத்தின் தலைமைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.பின்னர் அதே ஆண்டு சில வாரங்களின் பின்னர் புலனாய்வுப் பிரிவின் சக்தி (தற்சமயம் கனடா) தாய்லாந்தில் என்னை சந்தித்தபொழுதுஅனைத்துலகம் அனுப்பியிருந்த ஏழு பக்க அறிக்கையின் பிரதியை எனது கையில் தந்து படித்துப் பார் என சொல்லி சிரித்தான்.

பின்னர் சக்தி ஆயுதம் கடத்திய குற்றச்சாட்டில் தாய்லாந்து பர்மா எல்லையில் வைத்து தாய்லாந்து இராணுவ அதிகாரி ஒருவரோடு கைது செய்யப்பட்டு ஐந்து வருடங்கள் தாய்லாந்தில் சிறை வைக்கப்பட்ட செய்தி ஊடகங்களில் வெளியாகி அனைவரும் அறிந்ததே. இதை ஏன் இங்கு எழுத வேண்டி வந்தது என்றால் அனைத்துலகச் செயலகம் தங்களிற்குள் மாறி மாறி அடிபட்டுக்கொண்டு ஒருவரை மற்றவர் அவர்கள் இலங்கை அரசின் கைக்கூலிகள் என்று குற்றம் சாட்டுவது வழமையாக நடப்பது ஒன்றாகி விட்டது.

இப்படி அனைத்துலகத்தின் பொறுப்புக்களில் இருந்த ஒவ்வொருவருமே ஒரு வன்முறைக் குழுவை தங்கள் தேவைகளிற்காக பாவிப்பதும் வழமையான ஒன்றே. அதே வழியில் தான் பரிதியும் பாம்புக்குழுவை தனது தேவைகளிற்காக பாவித்து வந்தார். அவரது கொலை பற்றிய விசாரணைகள் போய்க்கொண்டு இருக்கும் இதே நேரம் அனைத்துலகச் செயலகத்தினரால் மீண்டும் இணையும் புலிகள் அமைப்பு என்கிற தலைப்பிட்டு ஒரு காணொளியொன்று இணையத்தினூடக பரவ விடப்பட்டுள்ளது. புலிகள் அமைப்பு மீளவும் இணைகின்றார்களா?? அந்த காணொளியில் இருப்பவர்கள் யார்?? அவர்கள் சொல்ல வருகின்ற சேதி என்ன என்பதையும், கடைசியாக பரிதிக்கும் தலைமைச் செயலகத்தை சேர்ந்த தமிழரசனிற்கும் இடையில் என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்பதனையும் பார்க்க வேண்டும்.

அதற்குமுன்னால் ஒன்று, 1995ஆம் ஆண்டு புலிகளின் புலனாய்வு மற்றும் வெளிக்கட்டமைப்பைச் சேர்ந்தவர்களாலேயே புலிகளின் அனைத்துலகத்தால் நடாத்தப்பட்ட வியாபார நிலையமும் அவர்களது அலுவலகமும் தாக்கப்பட்டதை எழுதியிருந்தேன் அல்லவா. அது பலரிற்கும் ஆச்சரியத்தை கொடுத்திருக்கிறது. என்னுடைய நண்பர்கள் மட்டுமல்ல பல முன்னைநாள் போராளிகள்கூட அந்தச் சம்பவம்பற்றி அறிந்திருக்கவில்லை. உண்மையிலேயே இலங்கை புலனாய்வாளர்களோ அல்லது ஒட்டுக்குழுக்களோ நடத்தியதாகவே இது வரை காலமும் நினைத்திருந்தார்கள். அதேபோலத்தான் புலிகள் அமைப்பின் அனைத்துலக செயலகத்தை சேர்ந்தவரே தங்களது பொறுப்பாளரை போட்டுக்கொடுத்த சம்பவம் ஒன்றும் ஜேர்மனியில் நடந்தது.

புலிகள் அமைப்பின் முடிவிற்குப் பின்னர் அனைத்துலக செயலக பொறுப்பாளர் கஸ்ரோ இறந்துபோக வெளிநாட்டு அனைத்துலகச்செயலகம் அனைத்தையும் நோர்வேயில் இருந்து நெடியவன் என்பவர் இயக்க அவரிற்கு அடுத்த நிலை பொறுப்பாளராகவும் ஜேர்மனிய பொறுப்பிலும் இருந்தவர்தான் வாகீசன் என்பவர். புலிகளின் முடிவிற்கு பின்னர் நெடியவனும் வாகீசனும் கனடா அமெரிக்கா தவிர்ந்த மற்றைய நாடுகளிற்கு பயணம் செய்து புலிகள் அமைப்பின் சொத்து விபரங்களை திரட்டியவர்கள், தங்களின் நம்பிக்கைக்குரிய தாங்கள் கைகாட்டும் நபர்களின் பெயரிற்கு மாற்றி விடும்படி கோரிக்கை வைத்தனர், மறுத்தவர்கள் மிரட்டப்பட்டனர்.


அதேபோலத்தான் சுவிசிலும் அனைவரிடமும் கோரிக்கை வைத்தபோது சுவிஸ் பொறுப்பாளராக இருந்த குலம் இவர்களது கோரிக்கைக்கு மறுத்ததோடு பலர் தன்னை நம்பித்தான் கடன் எடுத்து பணம் தந்திருக்கிறார்கள் எனவே வியாபார நிலையங்களால் வரும் வருமானத்தை வைத்து அந்தக் கடன்களை அடைக்கவேண்டும் என்று சொன்னதற்கு, கடன் அடைக்கிற வழி எங்களிற்கு தெரியும் நீ உனதுவேலையைப் பார் இன்றிலிருந்து நீ பொறுப்பாளர் இல்லையென்று விட்டு நெடியவனும் வாகீசனும்குலத்தை தாக்கிஅலுவலகத்தை விட்டு துரத்தியும்விட்டிருந்தார்கள். இங்கு குலம் என்பவர் யார்



நெடியவன்



வாசீசன்



குலம்

என்றும் சுருக்கமாக சொல்லி விடுகிறேன், சுவிஸ் நாட்டில் புலிகளின் பொறுப்பாளரக இருந்த முரளி தற்சமயம் கனடாவில் வசிக்கிறார். இவர் நிதி சேகரித்தது சிலரை அச்சுறுத்தியது தொடர்பாக சுவிஸ் காவல்துறையால் கைதான பின்னர் சுவிஸ் பொறுப்பை ஏற்றவர் குலம். எழுபதுகளின் இறுதியில் பிரபாகரன்அவர்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்திய காலங்களில் பிரபாகரனை புன்னாலைக்கட்டுவன் பகுதியில் தனது வீட்டில் தங்கவைத்து பராமரித்ததில் இருந்து இவரது இயக்கத்துடனான தொடர்பு தொடங்குகின்றது. பிரபாகரனே குலம் அண்ணை என்று மரியாதையோடு அழைக்கப்பட்டதொரு மனிதர்.

1984ஆம் ஆண்டு இலங்கையரசின் அவ்ரோ ரக விமானத்தை தானே தயாரித்து எடுத்துச்சென்ற நேரக் கணிப்பு குண்டின் மூலம் தகர்த்தவர். அதற்கும் மேலால் ஆரம்ப கால இயக்க விதிக்கு அமைய இன்று வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கும் ஒரு மனிதன். பிரபாகரன் அவர்களே திருமணம் செய்த பின்னர் பல தடவைகள் குலத்தை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டும் தமிழீழம் கிடைக்கட்டும் பார்க்கலாம் என்று சொல்லி வந்தவர். புலிகளைத் திட்டுபவர்கள் கூட குலம் அண்ணையை திட்டுவது கிடையாது அப்படியான ஒருவரை சொத்திற்காக நெடியவனும் வாகீசனும் அடித்து உதைத்திருந்தார்கள். பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் இந்த செய்கைக்காக நெடியவனையும் வாகீசனையும் வெளிநாட்டில்வைத்தே போட்டுத் தள்ள சொல்லியிருப்பார்,

இதற்கு அடுத்ததாக ஜேர்மனியில் அனைத்து மாநிலங்களிலும் தங்கள் பெயர்களில் சொத்துக்களை வைத்

**ஜேர்மனியில் அனைத்து மாநிலங்களிலும் தங்கள் பெயர்களில் சொத்துக்களை வைத்திருந்த பொறுப்பாளர்கள் அனைவரையும் அதன் விபரங்களோடு தன்னை வந்து சந்திக்கும்படி அழைப்பு விடுத்த வாகீசன், சந்திக்கும் இடம் திகதி நேரம் அனைத்தையும் அறிவித்து விடுகிறார். அவர்கள் சந்திப்பதாக சொல்லியிருந்த உணவு விடுதியில் வாகீசன் காத்திருக்கிறார். பெரும்பாலானவர்கள் வந்துசேர்ந்து விட்டிருந்தார்கள், முக்கியமான ஒருவரைத் தவிர.**

திருந்த பொறுப்பாளர்கள் அனைவரையும் அதன் விபரங்களோடு தன்னை வந்து சந்திக்கும்படி அழைப்பு விடுத்த வாகீசன், சந்திக்கும் இடம் திகதி நேரம் அனைத்தையும் அறிவித்து விடுகிறார். அவர்கள் சந்திப்பதாக சொல்லியிருந்த உணவு விடுதியில் வாகீசன் காத்திருக்கிறார். பெரும்பாலானவர்கள் வந்துசேர்ந்துவிட்டிருந்தார்கள், முக்கியமான ஒருவரைத் தவிர. அவர் யாரெனில் தென்மாநிலங்களிற்கு பொறுப்பாக இருந்த ஸ்ருக்காட் நகரைச் சேர்ந்த சிறிரவி என்பவரே. சிறிரவிக்காக காத்திருந்தவேளை சிறிரவி வரவில்லை, அவரிற்கு பதிலாக அங்கு வந்தவர்கள் ஜேர்மனிய காவல்துறையினர். வாகீசனையும் அவரோடு நின்றவர்களையும் கைது செய்கிறார்கள். ஓபகௌசன் என்னும் இடத்தில் இயங்கிய வாகீசனின் அலுவலகத்தினுள் புகுந்த ஜேர்மன் காவல் துறையினர் அங்கிருந்த ஆவணங்களையும் எடுத்துச் சென்றார்கள்.

(தொடரும்)

# ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானம்;
# இந்தியாவுடன் வோஷிங்டன் இரகசிய பேச்சு

## தீர்மானத்தின் நகல் புதுடில்லியிடம் கையளிப்பு

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வருவதற்கு உத்தேசிக்கும் தீர்மானம் தொடர்பாக இந்திய இராஜதந்திரிகளுடன் அமெரிக்கா இரகசியப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரவுள்ள புதிய தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ள போதிலும், இந்திய அரசாங்கம் இந்த விவகாரம் குறித்து இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று புதுடில்லியில் இருந்து கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அமெரிக்க குழுவினர் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்டபோதிலும், மன்மோகன்சிங் அரசாங்கம், கடந்தமுறை போன்று இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதாக வோஷிங்டனுக்கு வாக்குறுதி எதையும் வழங்கவில்லை. எனினும் இருதரப்புப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன.

மார்ச் மாதக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள உத்தேச தீர்மானத்தின் பிரதி தமக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்று அமெரிக்கக் குழுவுடன் பேச்சு நடத்திய இந்திய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

அதேவேளை, உத்தேச தீர்மானத்தின் உள்ளடக்கங்களை ஆராய்வதற்கு தமகது கால அவகாசம் தேவை என்று வோஷிங்டனுக்கு புதுடில்லி தகவல் பரிமாறியுள்ளதாக கொழும்புக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## அரச ஊழியர்களுக்கு இனி வங்கிக் கடன் இல்லை

(கொழும்பு)


அரசாங்க ஊழியர்களுக்கு அரச வங்கிகளில் வழங்கப்பட்டு வந்த கடன்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. அரச ஊழியர்களுக்கு வங்கிக் கடன்களை வழங்க வேண்டாம் என அரச வங்கிகளின் முகாமையாளர்களுக்கு உத்தியோகப் பற்றற்ற வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கவில்லை என நிதி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்

அரசாங்க வங்கிகளின் நிதி நிலைமைக்கு ஏற்ப வங்கி நிர்வாகம் சில சந்தர்ப்பங்களில் கடன் வழங்குவது குறித்து தீர்மானம் எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# பௌத்த பிக்கு அரசியலில்;
# அது நாட்டுக்கு அவமானம்



(கொழும்பு)

பௌத்த தர்மத்தின் படி பௌத்த பிக்கு ஒருவர் அரசியல் செய்வது அகௌரவமானதாகும் என்று அஸ்கிரிய மஹா நாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக் சித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குவது மற்றும் ஆசி வழங்குவது மாத்திரமே பௌத்த பிக்குவின் கடமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டு பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா நேற்றுமுன் தினம் மஹா நாயக்கரை சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதனிடையே, வனவிலங்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் விஜித விஜயமுனி செய்சாவும் நேற்றுமுன்தினம் அஸ்கிரிய மஹா நாயக்கரிடம் ஆசி பெற்றுக் கொண்டார்.

# அம்பாறைக் கடலில் பயணிகள் தத்தளிப்பு;
# கைகொடுத்து உதவியது கடற்படை

## அத்தனை பேரும் வெளிநாட்டவர்கள்

(அம்பாறை)

அம்பாறை - ஒலுவில் கடல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் தத்தளித் துக்கொண்டிருந்த பங்களாதேஷ், மியன்மார் நாடுகளைச் சேர்ந்த 138 பேரை இலங்கை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

எனினும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சட்டவிரோதமான முறையில் பங்களதேஷில் இருந்து அவுஸ்ரேலியாவுக்குச் சென்று கொண்டிருந்த குறித்த குழுவினர், ஒலுவில் கடலில் 70 மைல்களுக்கப்பால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோதே கடற்படையினரால் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் எட்டுவயதுக்குட்பட்ட சிறுவர்கள் 8 பேரும் பெண்கள் 3 பேரும் உள்ளடங்குகின்றனர். உணவின்றி ஒருவர் இறந்துள்ளார். மேலும் மயக்கமுற்ற நிலையில் 2 பெண்கள் உட்பட 6 பேரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் நான்கு நாட்களாக உணவுகள் இன்றி நடுக்கடலில் இருந்திருப்பதாக கடற்படையினரின் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.நா. நிபுணர்குழு மீதான தடையை
# இலங்கை அரசு நீக்க வேண்டும்

## பிரிட்டிஷ் அழுத்தம் அதிகரிக்கிறது

(ஜெனிவா)

அனைத்துலக சமூகத்தினால் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்துப் பார்வையிட, ஐ.நாவின் அறிக்கையளிக்கும் சிறப்பு நிபுணர்களுக்கு இலங்கை அழைப்பு விடுக்க வேண்டும் என்று பிரித்தானியா கோரியுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பிரித்தானியாவின் வெளிவிவகாரப் பணியக மற்றும் கொமன்வெல்த் விவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட், கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் உரையாற்றியபோதே பிரித்தானியாவின் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதை பிரித்தானியா வரவேற்கிறது. ஆனால், அதுபோன்ற அழைப்பு ஐ.நாவின் அறிக்கையளிக்கும் சிறப்பு நிபுணர்களுக்கும் விடுக்கப்பட வேண்டும். வரும் மார்ச்சில் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து மீளாய்வு செய்யப்படும்.

அப்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்படும்.

இது தனது அடைவுகள் மற்றும் சவால்கள் குறித்து இலங்கை வெளிப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பாக அமையும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையகத்தின் 10 அறிக்கையளிக்கும் சிறப்பு நிபுணர் களை இலங்கைக்கு அனுப்ப, ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மையில் முயற்சிகளை மேற்கொண்டபோது அதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்திருந்தது.

முதலில் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வரவேண்டும் என்று இலங்கை வெளிவகார அமைச்சு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன அரசுக்கு கொழும்பில் காணி;
# எதிர்க்கட்சிகள் திரண்டு போர்க்கொடி

## அரசுக்கு புதிய தலைவலி

(கொழும்பு)

சீன அரசுக்கு கொழும்பில் தீர்வைகள் எதுவுமின்றி காணித்துண்டு வழங்கியது குறித்து எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இது அரசுக்கு புதிய தலைவலியாக மாறியுள்ளது. சீன தூதரகத்துக்காக கொழும்பு - 7 இல் உள்ள 122 பேர்ச்சஸ் நிலம் ஒன்று எவ்வித வரிகளும் இன்றி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நேரடி உத்தரவின் பேரில் இந்த நிலம், வெளிநாட்டவர்களுக்கு நிலம் கொள்வனவு செய்யும் போது கடைப்பிடிக்கப்படும் எந்த நியமங்களும் இன்றி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த எதிர்க்கட்சியினால் இந்த வாரத்தில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பப்படும் என்று அந்தக் கட்சித் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

# அரசுக்கு எதிராகப் போராட்டம்
# தெற்கில் வலுக்கும் எதிர்ப்பலை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக நாளை மறுதினம் கொழும்பில் பாரிய போராட்டம் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாத யாத்திரை மற்றும் விசேட பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் குடும்ப நிர்வாகத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.

'காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் அமைப்பு' என்ற அமைப்பினால் இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

இந்தப் பாதயாத்திரை லேக்ஹவுஸ் சுற்று வட்டத்தில் ஆரம்பமாகி பொரளை ஊடாக ஹைட் மைதானம் வரையில் தொடரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கைதிகள் 1000 பேருக்கு
# இன்றைய தினம் விடுதலை

(கொழும்பு)

நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் 65 ஆம் சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட உள்ளது. பாலியல் வன்கொடுமை, சிறுவர் துஷ்பிரயோகம், சுங்க மோசடி, பயங்கரவாத் தடைச் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 27 குற்றச் செயல்களுடன் தொடர்புபடாத ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட உள்ளனர்.


இரண்டாண்டு கால சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக் காலம் இரண்டு வாரங்களிலும், மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக் காலம் மூன்று வாரங்களினாலும் குறைக்கப்பட உள்ளது.

அபராதப் பணத்தைச் செலுத்த முடியாது தண்டனை அனுபவித்து வரும் கைதிகளே அதிகளவில் விடுதலை செய்யப்பட உள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை உள்ளிட்ட 33 சிறைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட உள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் டபிள்யு. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

# யுத்தபூமியில் மீள்குடியமர்வு; வலி.வடக்கு மட்டும் விதிவிலக்கா?

## பொதுமக்கள் சந்திப்பில் காரசாரம்



(வலிகாமம்)

மண்டையோடுகளுக்கும் வெடிபொருட்களுக்கும் மத்தியில் முள்ளிவாய்களில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள போதும் வெடிபொருட்கள் அற்ற எங்கள் பிரதேசத்தில் ஏன் எங்களை அரசாங்கம் மீள்குடியேற்ற முடியாது என்று வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இதுவரை மீள்குடியேற்றப்பகுதியில் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பிலும் இதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வலி.வடக்கு பிரதேச மக்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 22 வருடங்களுக்கு மேல் தங்கள் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். பல்வேறு நெருக்கடிகள் சமூக பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்க்கையைக் கொண்டு செல்லவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் எங்கள் வளமான பூமியில் வெடிபொருட்கள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தாலும் அரசாங்கதினாலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இருந்த போதும், வெடிபொருட்கள் இருக்கும் இடத்தில் இன்று இராணுவம் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஏன் நாங்கள் மட்டும் அங்கு மீள்குடியேற முடியாது என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தற்போது இராணுவத்தால் எமது பிரதேசத்தை அண்டிய பகுதியில் பாதுகாப்பு வேலி அமைப்பதற்காக வீடுகள் இடிக்கப்பட்டு வருகின்றன இதனை உடனடியாக தடுத்து நிறுத்தி அப்பகுதியில் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத்தலைவர் சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## வலி.வடக்கில் மீள்குடியமர்த்தப்படாமல் 7061 குடும்பங்கள் உள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டம் வலி.வடக்கு பிரதேசத்தில் 7061 குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப் படாமல் நலன்புரி நிலையங்களில் மற்றும் உறவினர்கள் வீடுகளில் வாழந்துவருவதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் இன்னமும் 24 கிராம அலுவலர் பிரிவுகளில் 7061 குடும்பங்களைச் சேர்ந்த 25328 பேர் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் உள்ளனர்.

இதில் 288 குடும்பங்கள் தெல்லிப்பளைப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள 6 நலன்புரி நிலையங்களிலும் ஏனையவர்கள் யாழ்.மாவட்டத்தின் ஏனைய இடங்களில் உள்ள நலன்புரிநிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 24 கிராம அலுவலர் பிரிவிலும் மூன்று மாத காலத்திற்குள் மீள்குடியேற்றம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்ட போதும், மூன்று மாதங்களைக் கடந்தும் இந்தப்பகுதி மக்கள் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். (02)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் 'தொழிற் சங்க வரலாற்றில் இலங்கை வர்த்தக ஊழியர் (C.M.U) சங்கமும் தோழர் பாலா தம்புவின் வகிபாகமும்' விடயம் பற்றிய கலந்துரையாடல் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள தனியார் D.M.I தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் ஏ.சி. ஜோர் சொ.சிவபாலன் ஆகியோர் உரையாற்வுள்ளனர்.

## இலங்கை இலக்கிய பேரவையால் நூல்களுக்கான விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவையினால் வருடாவருடம் சிறுகதை, நாவல், காவியம், கவிதை, சிறுவர் இலக்கியம், ஆய்வு, சமயம், பல்துறை, நாடகம், அறிவியல், மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) ஆகிய துறைசார்ந்த இலக்கிய நூல்களுக்கு தெரிவின் மூலம் விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில், கடந்த 2012 ஆம் ஆண்டு வெளிவந்த இத் துறைகள் சார்ந்த இலக்கிய நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதனால், குறிப்பிட்ட ஆண்டில் நூலினை வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன் சிவதாசன், செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல.45, நெத்தாரிஸ் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்குமாறும், நூல்கள் இலங்கையில் பிரசுரமானதாக இருக்க வேண்டும் எனவும் பேரவையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு


(வடமராட்சி)

வடமராட்சியில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி - மத்தொனி, கரவெட்டி மேற்கு ஜே.363 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த கந்தசாமி திலீபன் (வயது - 27) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் நெல்லியடி பொலிஸார் வீட்டிலுள்ள மரமொன்றில் தொங்கிய இச் சடலத்தை மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் மந்திகை ஆதார வைத்திய சாலை பிரதேச அறையில் வைக்கப்பட்டிருந்தது.

மரணம் குறித்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (18)



வரணி - கரம்பைக் குறிச்சி மேற்கைச் சேர்ந்த லயன் சி.ஜெயசங்கர் அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட சாமஸ்ரீதேசமாணிய பட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் வழங்கி கௌரவிப்பதனைக் காணலாம். (105)

## உதவிப்பணம் பெறலாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவருக்கான இம்மாதத்திற்குரிய கொடுப்பனவு, தபாலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களில் சென்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முதல் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (104)

## முரசின் இன்றைய பலன்

(04.02.2013 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 22 ஆம் திகதி. நட்சத்திரம் விசாகம் பிற்பகல் 2.47 வரை. திதி நவமி பின்னிரவு 2.13 வரை.
இராகுகாலம் 8.05 - 9.35
வரை. சுபநேரம் 12.35 - 2.05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சவால்களை ஏற்பீர்கள். புதிய யுக்திகளால் தொழில் இடையூறு விலகும். கூடுதல் இலாபம். கடன் தீரும். உறவினர்களால் குழப்பம். உடல்நலம் சீர்பெறும். |
| ரிஷபம் | உயர்ந்த செயல்களால் புகழ் பெறுவீர்கள். வாழ்க்கைத்தரம் உயரும். புதிய சாதனை. உறவினர்களிடம் நெருக்கம். பிணி. |
| மிதுனம் | ஓய்வு. கவனக் குறைவால் செலவு. பயணத்தில் மாறுதல். எதிர்காலத் திட்டமிடல். விரும்பியது தேடி வரும். தர்ம எண்ணம். வெளியூர் நற்செய்தி. |
| கடகம் | அலைச்சல். விமர்சனத்தால் மனவருத்தம். நிதான சிந்தனை. அவசரப்பணி ஒன்று ஏற்படலாம். முயற்சியினால் பணவரவு. |
| சிம்மம் | அறிமுகமில்லாதவர்க்கும் உதவிபுரிவீர்கள். தொழில் இடையூறு விலகும். இலாபம். பணம் வசூலாகும். கடன் நீங்கும். |
| கன்னி | கோபமும் உணர்ச்சி வசப்படுதலும். நண்பர் துணை ஆறுதல். தொழில் சீராக முயற்சி துணை நிற்கும். பணவரவு. சேமிப்பு கை கொடுக்கும். புதிய அறிமுகம். |
| துலாம் | புதிய இடங்கள் செல்ல, புதிய பொருட்கள் வாங்க ஆர்வம். பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி சாதனை. பணவரவு. குடும்பத்தேவைகள் தீரும். |
| விருச்சிகம் | முன்னேறும் வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். வியத்தகு செயல்கள் நடக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம். தாராள பணவரவு. |
| தனுசு | வெற்றிக்கு ஆசிகள் கிடைக்கும். புதிய நம்பிக்கை வளரும். தொழிலில் கூடுதல் அக்கறை. பணவரவு திருப்தி. குடும்பத்தின் தேவை நிறைவேறும். |
| மகரம் | செயல்களில் குழப்பம். தகுதிக்கு மீறிய வாக்குறுதி கொடுக்கக்கூடாது. தொழிலில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். பண நெருக்கடி இருக்கும். |
| கும்பம் | அலைச்சல் இருக்கும். ஆலோசனைகள் உதவும். தொழிலில் மூலதனப் பிரச்சினை. தவிர்க்க இயலாத செலவுகள். வீடு, வாகன திருத்தம். |
| மீனம் | சவாலில் வெற்றி. கடின செயல் கூட எளிதாகும். தொழிலில் அனுகூலம். ஆதாய வரவு. சேமிப்பீர்கள். நண்பர், உறவினர் அன்பு. உதவி. |

## பெய்லி, ஸ்ரார்க், மைஸ்வெல் சிறப்பான செயற்பாடு

# மீண்டும் அசத்தியது ஆஸி.





(பேர்த்)

ஜோர்ஜ் பெய்லி, ஸ்ரார்க், மைஸ்வெல் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி பெற்றிபெற்றது. மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் பேர்த்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி, 16, 25, 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இந்நிலையில் களமிறங்கிய ஜோர்ஜ் பெய்லி ஒரு முனையில் தரித்து நின்று பொறுப்பாக ஆடினார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோர்ஜ் பெய்லி 110 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 125 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஹியூஸ் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டரன் சமி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 267 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. தொடர்ந்து சொதப்பி வரும் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் நான்கு ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து வந்தவர்களும் நிலைத்து நின்று ஆடவில்லை. இருப்பினும் ஒரு முனையில் பவள் பொறுப்பாக ஆடினார். இதேவேளை சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் 37ஆவது ஓவரில் களமிறங்கி ஆட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தினார். மைஸ்வெல் வீசிய இந்த ஓவரில் தொடர்ந்து நான்கு சிக்ஸர்களை விளாசி ஆட்டத்தில் சிறுபரபரப்பை ஏற்படுத்தினார். இறுதியில் மேற்கிந்தியத்திவுகள் அணி 38.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்று 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் பவள் 83, பிராவோ 45 ஓட்டங்களைப் பெற்றனர். ஆறு பந்துகளை எதிர்கொண்ட சுனில் நரைன் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்ரார்க் 32 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், மைஸ்வெல் நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக பெய்லி தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் அவுஸ்ரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

## மீண்டும் தலைமைப் பொறுப்பு?



(மும்பை)

மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டன் பொறுப்பை சச்சின் டெண்டுல்கர் மீண்டும் பொறுப்பேற்கவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டன் பதவியில் இருந்து விலகியுள்ள ஹர்பஜன்சிங், அதற்கான இராஜினாமா கடிதத்தை அணி நிர்வாகத்திடம் கொடுத்துவிட்டார். இதையடுத்து, அவருக்கு பதிலாக ரோகித் ஷர்மா அணியை வழிநடத்தலாம் என்று நேற்று முன்தினம் பரபரப்பான தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சச்சின் டெண்டுல்கர் மீண்டும் கப்டனாக நியமிக்கப்பட உள்ளார். முதல் மூன்று ஐ.பி.எல். சீசனில் கப்டனாக இருந்த டெண்டுல்கர் அதன் பின்னர் அந்த பொறுப்பை ஹர்பஜன் சிங்கிடம் விட்டுக்கொடுத்து விட்டு, ஓர் வீரராக மட்டும் அணியில் தொடர்ந்தார். ஆனால் ஹர்பஜன்சிங்கின் செயற்பாட்டில் மும்பை அணி நிர்வாகத்திற்கு திருப்தி இல்லை. இதனால் மறுபடியும் டெண்டுல்கரின் வசம் கப்டன் பதவி செல்கிறது. பொறுப்பை ஏற்க டெண்டுல்கரும் ஒப்புக் கொண்டுள்ளதாக ஐ.பி.எல். வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பாகிஸ்தான் அணிக்கு

# வெற்றி இலக்கு 480



(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 480 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் ஜோகனஸ்பேர்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் 204 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி தென்னாபிரிக்க அணி, டிவில்லியர்ஸ், அம்லா ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் வேகமாக ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸிற்காக மூன்று விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் டிவில்லியர்ஸ் 117 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிக்காது 103 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் டிவில்லியர்ஸ் பெற்ற 15ஆவது சதமாக இது அமைந்தது. அம்லா ஆட்டமிழக்காது 74, அணித் தலைவர் ஸ்மித் 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமர் குல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 480 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் மதிய உணவு வேளைக்காக நிறுத்தப்பட்டவேளை, ஒரு விக்கெட்டை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் நசீர் ஜம்ஷொட் 42, மொகமட் ஹபீஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர். தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸ் 253. பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸ் 49. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## பொண்டிங்கை வாங்கியது

# மும்பை இந்தியன்ஸ்

(சென்னை)

ஆறாவது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் நேற்று சென்னையில் நடைபெற்றது. அவுஸ்ரேலிய முன்னாள் கப்டன் பொண்டிங்கை மும்பை இந்தியன்ஸ் அணி ஏலம் எடுத்துள்ளது.


இதில் அவுஸ்ரேலியாவின் மைக்கல் கிளார்க், பொண்டிங்கை ஏலத்தில் எடுக்க அதிக போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதிக விலைக்கு போகவில்லை. ஆஸி. சகலதுறை வீரர் ஹெலன் மேகஸ்வெல் அதிகப்பட்சமாக 5. 3 கோடிக்கு ஏலம் போனார். நேற்றைய ஏலத்தில் ஆஸி., முன்னாள் கப்டன் பொண்டிங்கை 2. 12 கோடி ரூபாய்க்கு மும்பை அணி விலைக்கு வாங்கியது.

ஆர். பி.,சிங் 2. 1 கோடி : இந்திய வீரர் ஆர். பி.சிங் 2. 1 கோடிக்கு பெங்களூர் றோயல் சலஞ்சர் அணி ஏலம் எடுத்தது. தென்னாபிரிக்க வீரர் போத்தா ரூ. 2. 40 கோடிக்கு டில்லி டேர் டெவில்ஸ் அணி ஏலம் எடுத்தது. ஆஸி. வீரர் லூக் 1. 5 கோடிக்கு பஞ்சாப் அணிக்கு ஏலம் போனார்.

ஏலம் போன வீரர்களின் விலை பட்டியல் விவரம் வருமாறு:

ஆஸி. வீரர் ஜேம்ஸ் பவுல்கர் 2. 1 கோடி : ராஜஸ்தான் றோயல்ஸ் அணி . ஆஸி., வீரர் ஹெலன் மேக்ஸ்வெல் 5. 3 கோடி ( 200, 000 டாலர்) மும்பை இந்தியன் அணி.

இந்திய சகலதுறை வீரர் அபிஷேக் நாயர் 3. 5 கோடி புனே வாரியர்ஸ் அணி. இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்.) சார்பில், ருவென்ரி-20 போட்டிகள் ஐந்து ஆண்டுகளாக நடந்தன. ஆறாவது தொடர் ஏப். 3ஆம் திகதி தொடங்கி,மே 26ஆம் திகதி வரை நடக்கிறது. மேற்படி ஏலத் தொகை அனைத்தும் இந்தியாவின் நாணயப் பெறுமதி என்பது குறிப்பிடத்தக்கது.




கரணவாய் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன் இறுதிப் போட்டியில் அளவெட்டி மத்திய அணியை எதிர்த்து நெற்கொழு கழுகுகள் அணி மோதவுள்ளன. இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியை எதிர்த்து சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. கழகத் தலைவர் அ. குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கணக்காளர் கி. யோகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (93)

## இன்று மீள் ஒளிபரப்பு


(கொழும்பு)


இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளில் நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்திற்கு எதிராக இலங்கை மகளிர் அணி பெற்றுக்கொண்ட சாதனை வெற்றி மீள் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் வேண்டுகோளுக்கு இணங்கவும் அதிக கோரிக்கைகள் காரணமாகவும் சி.எஸ்.என் தொலைக்காட்சியில் இந்தப் போட்டி மீள் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இப்போட்டி இலங்கையின் சுதந்திரதினமான இன்று காலை 10.30 இற்கு மீள் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

இப்போட்டியில் இறுதிப் பந்தில் இலங்கை அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.



வடமராட்சி, அல்வாய் வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று முன்தினம் வெகுசிறப்பாக நடைபெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.ஜெயதேவா அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக பங்குகொண்டார். வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்கள் பல்வேறு திறமைகளை வெளிக்காட்டியதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அமைச்சரினால் பரிசில்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் பிரதேச பங்குத்தந்தை வண. நிரூபன் அடிகளார், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை, வடமராட்சி பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினருமான ஐ.ரங்கேஸ்வரன், பிரதேச இராணுவக் கட்டளை அதிகாரி, வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி, பெற்றோர்கள், ஆசிரியர்கள் பாடசாலைப் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உட்பட பெருமளவிலானோர் பங்குகொண்டனர்.

## விளையாட்டுச் செய்திகள்

## சதுரங்கப் போட்டி

(தும்பளை)

தும்பளை மேற்கு விவேகானந்தா விளையாட்டுக்கழகம் விரைவில் சதுரங்கச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

வயது அடிப்படையில் இப்போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இதில் 11வயது முதல் 13வயதுப் வரை யிலாக ஒரு பிரிவிற்கும், 14 வயது முதல் 16 வயது வரையிலாக ஒரு பிரிவாகவும், 17 வயது முதல் 19 வயது வரையிலாக பிரிவு பிரிவாகவும், 20 வயதிற்கு மேற்பட்டோர் ஒரு பிரிவாகவும் மொத்தம் நான்குபிரிவுகளாகப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும், சதுரங்கப் போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் ஆர்வமுள்ள அனைவரும் இப்போட்டிகளில் பங்குகொள்ள முடியும் எனவும் போட்டி அமைப்பாளார்கள் தெரிவித்துள்ளனர். (62)

## நிர்வாகத் தெரிவு

(யாழ். நிருபர்)

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 2013ஆம், 2014ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக எம். இளம்பிறையன் தெரிவு செய்யப்பட்டார். மற்றும் செயலாளராக பி. நேசரூபன், உப தலைவராக என். துஷ்யந்தன், சி. ஏ. அரவிந்தன், ரி.பி.கணேசன் ஆகியோரும், பொருளாளராக வை.யுவராஜ்ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.(10)

## மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அதிபர் அரியகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. சிறிகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

## யாழ்ப்பாண லீக் சிறப்பான வெற்றி

(உரும்பிராய்)

கிளிநொச்சி லீக் அணிக்கெதிரான கால்பந்துப் போட்டியில் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணி அபார வெற்றி பெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் லீக் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கிளிநொச்சி லீக் கால்பந்தாட்ட அணிக்கும், யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணிக்குமிடையிலான போட்டி ஒன்று நேற்று முன்தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆரம்பம் முதலே யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி அபாரமாக ஆடியது. இறுதியில் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது. ஏற்கனவே, யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணியை வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

## இரண்டாவது சுற்றில் அராலி ஏ.எல். தெல்லிப்பளை நாமகள்

(அராலி)

அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு அராலி ஏ.எல். மற்றும் தெல்லிப்பளை நாமகள் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

அராலி மேஸ்ட் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக, வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் இக் கால்பந்தாட்டப் போட்டி விலகல் முறையில் இடம்பெற்று வருகின்றது.

அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற முதலாவது போட்டியில் அராலி கலைவாணி அணியும், அராலி ஏ.எல். அணியும் மோதின. ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அராலி ஏ.எல். அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் தெல்லிப்பளை நாமகள் அணியும், அராலி சில்வெஸ்டார் அணியும் மோதின. ஆரம்பம் முதலே தெல்லிப்பளை நாமகள் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

போட்டிகள் அனைத்தும் மாலை வேளைகளில் நடைபெறும் வகையில் சிறப்பான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## நாளைய ஆட்டம்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச வருடாந்த விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் நாளை காலை 8.30 மணிக்குவட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழகக மைதானத்தில் ஆண்களுக்கான கபடிப் போட்டி நடைபெறவுள்ளது. அதேபோன்று எதிர்வரும் ஏழாம் திகதி ஆண்களுக்கான எல்லேப் போட்டி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம் இன்று 100ஆவது போட்டி



ஸ்கந்தா ஸ்ரார்



ஓல்ட் கோல்ட்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் ஒன்பதாவது ஆண்டாக நடாத்தும் வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் 100ஆவது போட்டி இன்றைய தினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளளது.

இப்போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணியும், ஸ்கந்தா ஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

கடந்த எட்டு வருடங்களில் யாழ்.பல்கலைக்கழக அணி மூன்று (2000,2008, 2009) தடவையும், பற்றீசியன்ஸ் அணி மூன்று (2004, 2006,2007) தடவையும், மானிப்பாய் பரிஸ் அணி (2003) ஒரு தடவையும், யாழ். ஜொனியன்ஸ் அணி (2005) ஒரு தடவையும் ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாண கிரிக்கெட் வரலாற்றில் ஒரு கழகம் தொடர்ந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் 100ஆவது போட்டியை நடத்தும் பெருமையை யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# எந்தப் பலனையும் பெற்றுத் தராத ஏகாதிபத்திய விசுவாசம்


- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

இலங்கை வந்த அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழுவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு சனவரி 26 சனியன்று நண்பகல் அமெரிக்க தூதராலயத்தில் இடம்பெற்றது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கூட்டமைப்புத் தூதுக் குழுவிற்கு இரா.சம்பந்தன் தலைமை வகித்தார். அமெரிக்காவின் தூதுக்குழுவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் தெற்காசியா மற்றும் பசுபிக் விவகாரங்கள் பிரிவின் மூன்று வெளியுறவு பிரதிச் செயலாளர்கள் அங்கம் வகித்தனர். இச்சந்திப்பு தொடர்பாக இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை தமிழர்கள் பிரச்சினை பற்றி நாடு சுதந்திரம் பெற்ற நாள்தொடக்கம் இன்று வரை இடம்பெற்று வருகின்ற அநீதிகள், துயரங்கள், அறவழியில் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள அன்று நடத்திய போராட்டங்கள், அது பின்னர் ஆயுதப் போராட்டமாக மாற வேண்டிய நிர்ப்பந்தங்கள் முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னரும் தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களை பறிகொடுத்து சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமல் பாரம்பரிய பிரதேசங்களை பெரும்பான்மை இனத்திடம் பறிகொடுக்கும் நிலையில் எல்லாரும் கைவிட்ட நிலையில் அநாதரவாக வாழ்கின்ற அவல நிலை பற்றியெல்லாம் அமெரிக்கத் தூதுக்குழுவின் முன்னால் ஆதாரபூர்வமாக முன்வைத்தோம்" என குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற செய்திகளை கேட்டு புல்லரித்த காலம் மலையேறிவிட்டது. இது போன்ற செய்திகளை எத்தனை தடவை கேட்டிருக்கின்றோம். ஒவ்வொரு முறையும் "இந்த தடவை அரசாங்கம் தப்ப முடியாது", "சர்வதேசம் அரசாங்கத்துக்கு போதிய அழுத்தம் கொடுக்கும்", "அரசாங்கத்தை கடுமையான சர்வதேசப் பொறிக்குள் மாட்டிவிட்டிருக்கின்றோம்" என்று கூட்டமைப்பினர் விடுகின்ற அறிக்கைகளை கேட்டுக் கேட்டு தமிழ் மக்கள் காத்திருந்தது தான் மிச்சம். ஏதும் நடப்பதேயில்லை. மாறாக இருக்கும் உரிமைகளும் மென்மேலும் நெருக்குவாரத்துக் குள்ளாக்கப்பட்டே வருவதாக கூட்டமைப்பினரின் இந்த வீறாப்பு அறிக்கைகளை பிரசுரிக்கின்ற அதே பத்திரிகைகள் தான் தமது ஏனைய பக்கங்களில் அழுது வடிக்கின்றன.

அப்படி என்றால் அப்போ என்னதான் நடக்கிறது? என்பது பற்றி நாம் இனியாவது சிந்தித்தாக வேண்டும். அமெரிக்க தூதுக்குழுவினரை சந்திப்பதும் ஜரோப்பிய தூதுவர்களை சந்திப்பதும் இது ஒன்றும் முதல் தடவை அல்ல. கடந்த வாரம் கூட பிரான்சின் தூதுவர் யாழ்ப்பாணம் சென்ற போதும் இதே குற்றப்பத்திரிகைகளைத்தான் அவரிடமும் வாசித்தோம். யாது பலன் கண்டோம்? தமிழ் மக்களின் பிரச்சினைகளை நாம் யாரிடம் எடுத்துச் சொன்னாலும், நமக்கான தீர்வை அவர்கள் யாரும் தங்கள் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து தர முடியாது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ளத் தவறுகின்றோம். எமது பிரச்சினைகளில் எவ்வளவுதான் அக்கறை இருந்தாலும் அவரவர் எல்லைக்குட்பட்டே சர்வதேசத்தின் தலையீடு இருக்க முடியும். அதற்கும்கூட இந்தியா என்கின்ற பிராந்திய வல்லரசின் ஆசீர்வாதம் அவசியமானதாகும். அதை விடுத்து அமெரிக்காவோ ஐரோப்பாவோ ஆபிரிக்க நாடுகளில் தலையிடுவது போன்று எடுத்த எடுப்பில் இலங்கையில் எதையும் செய்து விட முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



அதன் காரணமாகத்தான் கடந்த இரு வருடங்களுக்கு முன் அமெரிக்கா சென்று வந்த கூட்டமைப்பு தலைவர்களால் எதையுமே சாதிக்க முடியவில்லை. சம்பந்தரும் மாவையாரும் வெள்ளை மாளிகைக்கு முன்னால் நின்று எடுத்து வந்த படங்களை வைத்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு பிலிம் காட்டியதுதான் மிச்சம். அப்போது நமது பத்திரிகைகள் கூட்டமைப்பினரின் அமெரிக்க பயணம் பற்றி எவ்வளவு புலுடாக்கள் விட்டன? சம்பந்தரின் அமெரிக்கப் பயணமானது தமிழர்களின் வரலாற்றில் மிகப்பெரிய மாற்றம் ஒன்று நிகழ்த்தப் போகின்றது என்று சொல்லப்பட்ட ஆருடங்களுக்கெல்லாம் என்ன நடந்தது?

அது மட்டுமல்ல கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் இந்த சர்வதேசத்தை சாட்சியாக வைத்துத்தான் கூட்டமைப்பினர் மக்களிடம் வாக்கு கேட்டனர். "இதோ சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது. மட்டக்களப்பு மக்களே வாக்களியுங்கள்" என்று திருகுதாளம் பண்ணியது இந்த கூட்டமைப்பினர்தான். மக்களும் இந்த மாயாஜால கதைகளில் மயங்கி வாக்குகளை வாரி வழங்கினர். சர்வதேசம் ஏன் இன்றுவரை கிழக்கு மக்களின் வாக்குகளுக்கு மதிப்பளித்து. தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுத் தர முன்வரவில்லை? என்று எந்த பத்திரிகைகளாவது இதுவரை கூட்டமைப்பினரை நோக்கி கேள்வி எழுப்பியதுண்டா?

எனவே தமிழ் மக்களின் தீர்வு நோக்கியல்ல. தமிழ் தலைவர்களின் ஏகாதிபத்திய விசுவாசத்தின் தொடர்ச்சியே இலங்கை வந்த அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பாகும். இது போன்ற செயற்பாடுகள் இலங்கை அரசை மட்டுமல்ல, முழு சிங்கள மக்களையும் தமிழர்களுக்கு எதிராக திருப்புவதை தவிர வேறு எதையும் செய்யப் போவதில்லை.

இலங்கையில் இனப்பிரச்சினை ஆழமாக வேர் ஊன்றுவதற்கும் அன்றிருந்த இந்த ஏகாதிபத்திய விசுவாசமே காரணமாகும். இன்று நாம் சொல்லுகின்ற சிங்கள மொழிச் சட்டம் ஏற்படுவதற்கும் அன்றைய தமிழ்த் தலைவர்களின் ஆங்கிலம் மீதான விசுவாசமே காரணமாகும். 1920ஆம் ஆண்டிலிருந்தே ஆங்கிலத்தை அகற்றி சுய பாசைகள் அதாவது தமிழும் சிங்களமும் அரச கரும மொழிகளாக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் சிங்கள தலைவர்களிடமிருந்து வெளிப்பட்ட போதிலும் அதனை தமிழ்த் தலைவர்கள் ஆதரிக்கவில்லை. ஆங்கிலத்தை அகற்ற விடக்கூடாது என்று விவாதிக்கும் அளவிற்கு ஏகாதிபத்தியத்தை அண்டிப் பிழைத்த தமது அப்புகாத்து தொழில் மீதான விசுவாசம் இருந்தது. இந்த ஒத்துழையாமை செயற்பாடுகளே சிங்களத் தலைவர்களை இறுதியில் சிங்களத்தை மட்டுமாவது அரசகரும மொழி ஆக்குவதில் கருத்தூன்றச் செய்தது.

இப்படியாக எங்கோ இருக்கும் ஏகாதிபத்தியத்தை நம்பி உள்நாட்டில் இணைந்து வாழ வேண்டிய, சேர்ந்து பேச வேண்டிய, ஒருமித்து தீர்வு காண வேண்டிய சிங்கள மக்களை விட்டு விலகி விலகிச் செல்லுவதே நமது தலைமைகளின் வழக்கமாய் போனது. இந்த நிலை மாற வேண்டும். ஏனெனில் அழுதாலும் பிள்ளை அவள்தான் பெற வேண்டும் என்று சொல்வது போல இலங்கை அரசுதான் தீர்வு காண வேண்டும். அதை நோக்கியே நமது செயற்பாடுகள் இருக்க வேண்டும்.

## ஷேக்ஸ்பியரின் சொத்து


வறுமை காரணமாக ஷேக்ஸ்பியர் பதின்மூன்று வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்றார். அவர் செய்யாத தொழில் இல்லை. பால் கறந்தார் ஆடு மேய்த்தார் தோல் பதனிடும் வேலை செய்தார். பிழைப்பு நாடி லண்டன் நகரத்துக்கு வந்தார். நாடகங்களில் நடித்தார். நடிப்பு அவருக்கு கைகொடுத்தது. நாடகங்கள் எழுதினார். நல்ல வருமானம் வந்தது.

அந்தப் பணத்தை வீண் செலவு செய்யாமல் சேர்த்து வைத்து வட்டிக்குக் கடன் கொடுத்து பணத்தை மேலும் வளர்த்தார்.


ஷேக்ஸ்பியருக்கு 40 வயதானபோது, திருமணம் செய்து கொண்ட ஹாலோஹதாவே என்ற பெண்மணி அவரைவிட எட்டு ஆண்டுகள் மூத்தவர். இருவருக்கும் ஆரம்ப காலம் முதலே மன ஒற்றுமை ஏற்படவில்லை. எப்பொழுதும் வீட்டில் சண்டைதான். அதன் காரணமாக ஷேக்ஸ்பியர் மனைவியை விட்டு வெகு தொலைவு சென்று தனியாக வசித்து வந்தார்.

அவருக்கு ஏராளமான சொத்து சேர்ந்தது. ஷேக்ஸ்பியர் மரணமடைந்தபோது தமது சொத்தில் மனைவிக்காக எதுவும் எழுதி வைக்கவில்லை.

ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடகங்கள் அனைத்தும் அவர் மரணமடைந்த பிறகுதான் வெளிவந்து புகழ் சேர்த்தன.



## தேங்காய் தவிர்!




ஹார்ட் அட்டாக் எனும் திடீர் இதய அதிர்ச்சி நோயால் இன்று பலர் இறக்கிறார்கள். வாலிபர், வயோதிகர் யாரையும் இந்த நோய் விட்டு வைப்பதில்லை.

இந்த திடீர் அதிர்ச்சியைத் தவிர்க்க தேங்காய் கலந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பச்சை காய்கறிகள், பழங்கள் இவற்றைச் சாப்பிட வேண்டும். முடிந்தவரை எண்ணெயைக் குறைத்துவிடுங்கள். ஓட்ஸ் சாப்பிடுங்கள். அது உடலில் உள்ள கொழுப்பை குறைக்கும். சாப்பாட்டில் உப்பைக் குறையுங்கள். அதற்காக ஒரேடியாகவும் உப்பைக் குறைத்துவிடாதீர்கள். அது உடம்பிலுள்ள சோடியம் என்ற பொருளை குறைத்து, வேறு பிரச்சினைகளை உண்டாக்கும்.

## தெரியுமா!

- கறையான் தன் புற்றுக்களை ஒரு நகரத்தை நிர்மாணிக்கும் திட்ட அமைப்போடு கட்டுகின்றன. அதில் காளான் வளர்ப்பதற்கு தோட்டமும் உண்டு.
- வெகு நேரத்துக்கு நீருக்கடியில் இருப்பதற்காக முதலைகள் கற்களை விழுங்கும்.
- பாம்புகள் இல்லாத நாடு பின்லாந்து.
- ஒட்டகம் எவ்வளவு பசியோடு இருந்தாலும் மாலை 6 மணிக்கு மேல் உணவு உட்கொள்ளாது.



- பாம்பின் பற்கள் இரையைக் கவ்வ மட்டுமே பயன்படும். தின்ன உதவாது.

## ஆணவம் ஒழிந்தது!

தஞ்சை பெரிய கோயில் கட்டும் பணி வேகமாக நடந்து கொண்டிருந்தது. சோழப் பேரரசர் ராஜராஜ சோழன் அந்தப் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்.

ஒரு நாள், "கோயில் வேலை எப்படி நடைபெறுகிறது?" என்பதை அறிய விரும்பிய அவர், ஒரு வழிப்போக்கனைப் போல் மாறுவேடம் பூண்டு கோயில் பணி நடக்கும் இடத்துக்குச் சென்றார்.

அவரை அரசர் என்று எவரும் அறிந்து கொள்ளவில்லை.

அப்பொழுது ஒரு பெரிய பாறையைச் சுவரின் மேல் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். வேலையாட்கள் பலரும் ஒன்று சேர்ந்து கயிறு போட்டு இழுத்தும் அந்தப் பாறை சிறிதும் நகரவில்லை. எல்லோரும் சோர்வு அடைந்தார்கள்.

அங்கிருந்த மேற்பார்வையாளரோ, "என்னை எல்லோரும் ஏமாற்றுகிறீர்கள். இந்தப் பாறையை மேலே ஏற்ற முடியவில்லையா?" என்று கோபத்துடன் கத்திக் கொண்டிருந்தான்.

அவனருகில் போன அரசர், "ஐயா! நீங்களும் அவர்களுடன் சேர்ந்து அந்தப் பாறையைத் தூக்க முயற்சி செய்யக் கூடாதா?" என்று கேட்டார்.

"நான் இங்கு மேற்பார்வையாளன் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று ஆணவத்துடன் கேட்டான் அவன்.

"அப்படியா?" என்ற ராஜராஜசோழன் அங்கிருந்த வேலைக்காரர்களுடன் சேர்ந்து அந்தப் பாறையைத் தூக்க முயற்சி செய்தார்.

ஒரு வழியாக பாறை மேலே போய்ச் சேர்ந்தது.

பெருஞ்செல்வந்தரைப் போலிருந்த அவர் வேலையாட்களுடன் சேர்ந்து வேலை செய்தது அந்த மேற்பார்வையாளனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மறுநாள் பேரரசரிடமிருந்து அந்த மேற்பார்வையாளருக்கு ஒரு ஓலை வந்தது.

அதில், "கோயில் திருப்பணிக்கு ஆட்கள் போதவில்லை என்றால் உடனே அரசருக்குச் சொல்லி அனுப்பவும். நேற்று வேலை செய்ததைப் போல் அவர் வந்து வேலை செய்வார்" என்று எழுதியிருந்தது.

இதைப் படித்த மேற்பார்வையாளருக்கு ஆணவம் ஒழிந்தது.

பின் அவனும் மற்ற வேலையாட்களுடன் சேர்ந்து வேலை செய்து அவர்களுக்கு ஊக்கமளித்தான்.



## செப்புமொழி 18

"முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள் இவள் செப்புமொழி பதினெட்டுடையாள், எனிற் சிந்தனை ஒன்றுடையாள்" என்று பாரதமாதா குறித்துப் பாடியுள்ளார் பாரதியார். பாரதி சொன்ன செப்புமொழி பதினெட்டில் சிங்களமும் உண்டு. அந்த பதினெட்டும் வருமாறு:

1. அங்கம்
2. அருணம்
3. கலிங்கம்
4. கவுசிகம்
5. காமபோசம்
6. கொங்கணம்
7. கோசலம்
8. சாவகம்
9. சிங்களம்
10. சிந்து
11. சீனம்
12. சோனகம்
13. துளுவம்
14. பப்பரம்
15. மகதம்
16. மராடம்
17. வங்கம்
18. திராவிடம்

(திராவிடத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் அடங்கும்.



## கால அளவு

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் கண் பார்வை மங்கிப் படுக்கையில் இருந்தபோது மணி பார்க்க விரும்பினார். எனவே அவர் அருகிலிருந்த ஒருவரிடம், "கால அளவினைக் காதில் கூறுக" என்றார்.

மணி பார்த்தவர், "அஞ்சு முகனோடு ஆறுமுகனும், அவன் குஞ்சுமணியினொடு குகனும்" என்றார்.


**இதன் விளக்கம்:**

அஞ்சு முகன்- 5
ஆறுமுகன் - 6
குஞ்சுமணி - அரை
குகன் - கால்
அதாவது மணி 11.45 என்பது பொருள்.



## குஷ்வந்த் சிங் மனைவி

- R.P. ராஜநாயஹம் -




சுயசரிதை என்பது என்ன? வான்கோழி கையில் மயிலிறகு என்று தமிழன்பன் கவிதை சொல்வது நினைவுக்கு வருகிறது.

ஆனால் குஷ்வந்த் சிங் சுயசரிதை Truth, Love and a Little Malice படிக்கும்போது எழுத்தின் நேர்மை பற்றி நினைக்க வேண்டியிருக்கிறது.

குஷ்வந்த் சிங் Autobiography is the child of ageing lions என்கிறார்.

குஷ்வந்த் சிங் மிகப்பெரிய குடும்பத்தை சார்ந்தவர். அவருடைய அப்பா புதுடில்லியில் பல முக்கிய கட்டடங்களை நிர்மாணித்தவர். வெள்ளைக்காரனால் "சேர்" பட்டம் கொடுக்கப்பட்ட ஷோபா சிங். அவருடைய மனைவி குடும்பமும் மிகவும் பிரபலமான பணக்கார பாரம்பரியம் கொண்டது. மனைவியின் அப்பா கூட "சேர்" பட்டம் வாங்கிய சிங் தான்.

குஷ்வந்த் சிங்கின் பூர்வீகம் இப்போது பாகிஸ்தானில் உள்ள லாகூர்.

இந்த சுயசரிதையில் இல்லாத விஷயம் குஷ்வந்த் அப்பா ஷோபா சிங் தான் டில்லி குண்டு வெடிப்பில் ஈடுபட்ட சுதந்திரப் போராளி பகத் சிங்கை அடையாளம் காட்டிய கனவான்.

"பந்தியிலே சாப்பாடு கெட்டாலும் வீட்டிலே பெண் கெட்டாலும் வெளியே சொல்லக்கூடாது?!"

குஷ்வந்த் சிங் தன் மனைவியை சத்திய சோதனை செய்துள்ளார்.

லண்டனில் இவர் அந்தப் பெண்ணை சந்தித்த காலத்தில் அவள் உலக அழகிக்கான அங்க அமைப்பு தனக்கு இருப்பது பற்றிய பிரக்ஞையுடன் இருந்திருக்கிறாள். அவளிடம் இதயத்தை பறிகொடுத்தவர்கள் பற்றி ஒரு லிஸ்ட் குஷ்வந்த் சிங் தருகிறார்.. பிரதாப் லால், அமர்ஜீத், பரத்ராம். இவர்களில் பரத்ராம் திருமணமாகி குழந்தையும் உள்ளவன். குஷ்வந்த் சிங் இற்கும் அந்த பெண் கவல் மாலிக் இற்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்த பிறகு இந்த பரத்ராம் குடும்பத்துடன் கவல் மலிக் ஜேர்மனிக்கு போகிறாள்.

மங்கத் ராய் மட்டும் குஷ்வந்த் சிங் தன் மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் தவறு செய்து விட்டதாக திரும்ப திரும்பச் சொல்கிறான்.

திருமணம் செய்த பின் தன் மனைவி இன்னும் கன்னி கழியாதவள் என்று தேன்நிலவின் போது தெரிய வரும்போது குஷ்வந்த் சிங் ஆச்சரியப்படுகிறார்.

ஆனால் குஷ்வந்த் சிங் திருமணம் செய்து கொண்ட பின் அவர் மனைவியை தான் உயிருக்குயிராய் காதலித்ததாக மங்கத் ராய் சொல்கிறான். தினமும் தான் கவல் மாலிக்கை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்று கெஞ்சிக்கேட்கிறான்...குஷ்வந்த் சிங் சம்மதிக்கிறார்!

மங்கத் ராய் ஆக்கிரமிப்பின் காரணமாக கவல் மாலிக் ஓவியம் வரைவதையும் டென்னிஸ் விளையாடுவதையும் கை விட்டு விட்டு மங்கத் ராயுடன் சைக்ளிங் செல்கிறாள்.

குஷ்வந்த் சிங்கின் மனைவி அவர் பேச்சைக் கேட்காமல் பரத் ராம், மங்கத்ராய் சொல்பேச்சைத்தான் கேட்டுக்கொண்டிருந்ததால் சிங்கின் தன்னம்பிக்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.

லண்டன் தூதரகத்தில் தான் வேலை பார்த்த போது ஹைகமிஷனர் கிருஷ்ணமேனன் ஆக்கிரமிப்பில் குஷ்வந்த் சிங்கின் மனைவி இருந்ததைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

பிஜு பட்நாயக் (முன்னாள் ஒரிசா முதல்வர். இன்றைய ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் தந்தை!) தன் மனைவிக்கு நூல் விட்டுப்பார்த்து படியுமா என்று ட்ரை பண்ணிய விஷயத்தை குஷ்வந்த் சிங் எழுதியிருக்கிறார்.



பிரான்சில் UNESCO வில் வேலை பார்த்த போது பரத்ராம் இவர் மனைவி மீது ஜொள்ளு விட்டு தேடி வந்ததைப்பற்றி குறிப்பிடுகிறார்.

இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி எடிட்டராக குஷ்வந்த் சிங் இருந்த போது அவர் பேரும் புகழும் அடைந்த கால கட்டத்தில் மனைவியாலும் மகள் மாலாவாலும் தனக்கு கௌரவ பங்கம் ஏற்பட்டதாக போகிற போக்கில் குறிப்பிடுகிறார்.

கடவுள் நம்பிக்கையைத் துறந்தவர். ஆனால் மனைவி தன்னை விட்டு நிரந்தரமாகப் பிரிய விரும்புவதாகச் சொன்னபோது குருத்வாராவில் இரவு முழுதும் மனம் உடைந்து பிரார்த்தனை செய்திருக்கிறார். இருவருக்கும் இரண்டு வயது வித்தியாசம். ஐம்பதை ஒட்டிய வயதிலும் கூட இவர் மனைவி விவாகரத்து வாங்க முயற்சித்திருக்கிறார்.

மனைவியுடனான உறவு மிகவும் மோசமானதைப் பற்றி குறிப்பிடுகிறார்.

இவ்வளவிலும் இருவரும் அறுபத்து மூன்று வருடங்கள் சேர்ந்து வாழ்ந்திருக்கிறார்கள். ஒரு மகன் ராகுல் சிங். மகள் மாலா. முதுமையில் தன் மனைவி Alzheimer`s disease இல் பாதிக்கப்பட்ட நிலையில் உருக்கமாக எழுதுகிறார். தன் மனைவி இறந்து விட்டால் தான் எழுதுவதை நிறுத்தி விடுவேன் என்று தான் சுயசரிதையை முடிக்கிறார்.

I was always certain she would outlast me by many years. I am no longer sure that she will. But I have a gut feeling that if she goes before me, I will put away my pen and write no more.

இது தான் கடைசி வரிகள்.

குஷ்வந்த் சிங் மனைவி இந்த புத்தகம் வெளிவந்த 2002இல் இறந்து விட்டார்.

தன் 90 வயதில் குஷ்வந்த் சொன்னார்: "என் மனைவி இறந்து மூன்று வருடங்கள் ஓடி விட்டன. ஆனால் நான் இன்னும் எழுதி சம்பாதித்துக்கொண்டு தான் இருக்கிறேன்."

"இன்னும் நான்கைந்து வருடத்தில் வரப்போகும் சாவை எதிர்கொள்ளத் தயாராயிருக்கிறேன்" என்று அப்போது சொன்ன குஷ்வந்த் சிங்கிற்கு இந்த பெப்ரவரியில் 98 வயது நிறைவடைகிறது.




# 190 ஆவது ஆண்டில் சென்.ஜோண்ஸ் கல்லூரி

**1818ஆம்** ஆண்டு C.M.S மிஷன் பணிக்காக இலங்கைக்கு வருகை தந்த Re.Joseph Knight அவர்கள் நல்லூரில் வீடு ஒன்றைக் கொள்வனவு செய்து தனது பணியை ஆரம்பித்தார். இதுவே சென்.ஜோண்ஸ் கல்லூரி ஆரம்பிப்பதற்கு இவர் இட்ட வித்தாகும்.



அகில இலங்கை ரீதியில் 2011ஆம்ஆண்டு இடம் பெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் 2ஆம் இடத்தைப் பெற்ற மாணவன் சன்ஜயன்.

1822ஆம் ஆண்டு இவரது சமயப் பணிக்கும் கல்விப் பணிக்கும் துணையாக அவரது பாரியாரும், அவரது சகோதரியும் இணைந்து கொண்டனர். இவர்களுடைய தலைமைத்துவத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 8 பாட சாலைகளில் கல்விப் பணியும், சுவிஷேசப் பணியும் சிறப்பாக நடைபெற்று வந்தன. ஆனால், அந்த ஆண்டு யாழ்.நகரில் பரவிய கொலராதொற்று நோயினால் இவர்களது கல்விப்பணி பெரிதும் பாதிப் படைந்தது. அவ் 8 பாடசாலைகளிலிருந்து 7 மாணவர்களைத் தெரிந்து Re.Joseph Knight அவர்கள், தனது இல்லத்திலேயே 1823 ஆம் ஆண்டு Nallur English Seminary என்ற பெயரில் குருகுலக்கல்வி முறையில் கல்வியை ஆரம் பித்தார். 1841ஆம் ஆண்டு இக் கல்லூரி சுண்டுக்குளிக்கு மாற்றம் பெற்றது.



அகில இலங்கை ரீதியில் 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான தட்டெறிதலில் மூன்றாமிடத்தைப் பெற்ற பானுப்பிரியனும், அதேஆண்டு, 17 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஆபிரகாம் அனோஜனும், தேசிய வர்ண விருதைப் பெற்றார்கள்.

இக்கல்லூரி பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து சீரிய ஒழுக்க விழுமியங்களுக்கு ஊடே கல்வி, விளையாட்டு, கலை, கலாசார மேம்பாட்டுடன் நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ப மாணவர்களுக்கு சிறந்த ஆசிரியர்குழாமின் உதவியுடன் சிறந்த ஒரு கல்விக்கூடமாக விளங்குகிறது. மாணவர்களின் ஆளுமைவிருத்தியினையும், தலைமைத்துவப் பண்பினையும் மேம்படுத்தும் நோக்குடன் 30 Clubs and Society மூலம் விருத்தி செய்கின்றது.

ஆங்கில அறிவினை வளர்க்கும் நோக்குடன் (English language Development Programme)



சாரணர் இயக்கத்தில் ஜனாதிபதி விருதினை 2012இல் பெற்ற அபிசன் மற்றும் பீஸ்மன்.

போன்ற பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இன்றுள்ள பெற்றோர், பிள்ளைகளை ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சியுடன் இருப்பதை விரும்பு கின்றனர். அதற்கு முன்னோடியாக ஆண்டு 1முதல் A/L வரை ஆங்கில வகுப்புக்களும், ஆங்கிலமொழிமூல வகுப்புக்களும், சரளமாக ஆங்கில மொழியைப் பேசுவதற்கு விஷேட Spoken English பயிற்சிகள் காலை வேளையிலும் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மாலை வேளை விஷேட வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

கலைகளை வளர்க்கும் முகமாக மேலைத்தேய, கீழத்தேய வாத்தியக்கருவிகளைக் கற்க பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

மாணவர்களின் விளையாட்டு ஆர்வத்தைத் தூண்டும் முகமாக இரு அணிகளும் (Cricket, Foot ball) ஏனைய விளையாட்டுக்களுக்கு விஷேட பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

கல்வியில் தேசிய மட்டத்தில் 1980ஆம் ஆண்டு All Island Quiz Champion Ship ஐ வென்றது.

1989ஆம் ஆண்டு N.Subanesan 351Aggreget First in order merit island wide-Bioscience 1989A/L.

தேசியமட்ட தமிழ்பாட்டு தனி 2003, 2004, 2005, ஆகிய ஆண்டுகளில் செல்வன் சு.சுரசாகித்தியன் 1ஆம் இடத்தை வென்றார். National Level Creative Writing 2006ஆம் ஆண்டு செல்வன் சொலமன்ராஜாராம் 1 ஆம் இடத்தை வென்றார்.

தேசியமட்ட தமிழ்த்தின வில்லுப் பாட்டு போட்டியில் எமது மாணவர்கள் 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து 1ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர்.



2012இல் 3ஆம் பிரிவில் நடைபெற்ற தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பிடித்த அணி.

விளையாட்டில் தேசிய மட்டத்தில் 1949ஆம் ஆண்டு அகில இலங்கை Inter Collegiate Volley ball Champion.

1969ஆம், 1972ஆம் ஆண்டு எஸ். அன்ரனிப்பிள்ளை இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட அணி யில் இடம்பிடித்து 1972ஆம் ஆண்டு இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியிலும் இடம்பிடித்து இந்தியா சென்று விளையாடினார்.

1986ஆம் ஆண்டு All Island Un.13 Badminton Championship ஐ



2012இல் நடைபெற்ற தேசிய மட்ட வில்லுப்பாட்டு நிகழ்வில் முதலாமிடம் பிடித்த குழு.

Lal Samuel வென்றார்.

2003, 2004,2005ஆம் ஆண்டு யாழ். மாவட்ட பாடசாலை மினி டெனிஸ் அணியில் எமது கல்லூரி மாணவர். ஐவர் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற டெனிஸ்போட்டியில் பங்குபற்றி 1ஆம்இடத்தை வென்றனர்.

கல்லூரியினால் வழங்கப்பட்ட அதி உயர் விளையாட்டு வீரர்களுக்கான விருதினை (Johnian Eagle) S.Antonypillai 1972ஆம்ஆண்டு.

P.Thirukumar 1984ஆம் ஆண்டு.

T.Tharshan 2005 ஆம் ஆண்டு.

J.G. Abraham Anojan2011 ஆம் ஆண்டு பெற்றனர்.

1963ஆம்ஆண்டு சென்.ஜோன்ஸ் கல்லூரியோடு இயங்கும் JAFFNA ACCADEMY & SCHOOL OF TECHNOLOGY அசாதாரண சூழ்நிலை காரணமாக 1989ஆம் ஆண்டு இடை நிறுத்தப்பட்டு இவ்வாண்டு (2013) விஷேட பொலிவுடன் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தில்

GCE O/L, GCE A/L
SINGALA, ENGLISH (ADULTS)
TEACHER TRAINING
(ECTTP)NURSING வகுப்புக்கள் நடைபெறவுள்ளன

## Principals:

1823 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 25 அதிபர்கள் கடமையாற்றியுள்ளனர்.

ஸ்தாபகர்: Revd. Joseph Knight:
தேசிய அதிபர்: Revd. J.T.Arulanaintham
தற்போதைய அதிபர். Revd. N.J .ஞானப்பொன்ராஜா

இக்கல்லூரி பல்வேறு கல்விமான்களையும் பொறியியலாளர்கள், வைத்தியர்கள், அரசியல்வாதிகள், கலாவித்தகர்கள் போன்ற பல்வேறுவகைப்பட்டவர்களையும் உருவாக்கியுள்ளது. கல்லூரியின் ஆரம்ப காலத்தில் மூவின மக்கள் பல்வேறு பிரதேசத்தில் இருந்து வந்து கல்விகற்றனர் இன்று மீண்டும் அம்முறை தொடங்குகின்றது.

1983ஆம் ஆண்டு இடம் பெற்ற வன்செயல்களின் போது பாதிப்புற்ற மாணவர்களை அரவணைத்து, அவர்களுக்கு கல்வியூட்ட உதவி செய்தது போல, 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலரை அரவணைத்து அவர்களுக்குரிய சகல தேவைகளையும் பழைய மாணவர்களின் உதவியுடன் இலவசமாகச் செய்து கொடுத்து, அவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி தொடர்ந்து தன் சீரிய பணியை ஆற்றிவருகின்றது.

**திருமதி. S.ஆறுமுகசிகமணி**

நூலகர், சென். ஜோண்ஸ் கல்லூரி.

# சூழல் மாசடைதலைத் தடுக்கும் மீள் சூழற்சிப் பொறிமுறை

## யாழ்.மண்ணில் ஒரு பயன்மிக்க தொழில் முயற்சி

யாழ்.மாவட்டத்தில் திட்டமிட்டு தொடங்கப்பட்ட சிறுகைத்தொழில் இப்பொழுது சிறப்பாக வெற்றிநடைபோடுகிறது. அதுதான் டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி வேலைத் திட்டம். இந்த வேலைத்தளத்தின் குறிக் கோளும் முயற்சியும் என்ன என்பதை இங்கு பாரப்போம்.



இப்போது உலகம் எதிர் கொண்டுள்ள மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்று சூழல் மாசடைதல் நாடு பூராகவும் கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் மயம். அதுபோல் யாழ்.மாவட்டம் முழுவதிலும் இப்பிரச்சினை உண்டு.

இவை அனைத்தையும் தடுக்க ஒரு வழி எமது மனம் மாறவேண்டும். நாம் இந்த உலகத்தில் இருந்து எடுத்த எங்கள் அனை வருக்கும் தேவையான எரிபொருளை அகழ்ந்து எடுப்பதை நிறுத்தினால் பிளாஸ்ரிக்கிலான பொருட்களையும் பாவிப்பதை நிறுத்த முடியும் இதில் எது சாத்தியம் என்று நீங்கள் நினைக் கிறீர்கள்?

உலகத்தில் நடைமுறையில் உள்ள ஒரு விடயத்தை எமது டயானா பிளாஸ்ரிக் மீள் சூழற்சி பொறிமுறையின்படி நாம் ஒரு திட்டம் வைத்துள்ளோம். நாம் எமது மாவட்டத்தில் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பொருட்கள்



அனைத்தையும் உங்களிடம் விலைக்கு வாங்கி அதனை திரும்பவும் பாவிப்பதற்கான வழியை ஏற்படுத்தி வருகின்றோம்.

நீங்கள் பாவிக்கும் எந்த பிளாஸ்ரிக் பொருட் களும் புதியவை இல்லை. அனைத்தும் பல முறை பாவிக்கப்பட்டது என்பதை நீங்கள் அறியவேண்டும்.

நீங்கள் பாவிக்கும் பிளாஸ்ரிக்கை தீயிட்டுக் கொழுத்துவதை நிறுத்துங்கள். கொழுத்துவ தால் இந்த உலகம் அழிவதை பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். உதாரணம் சொல் வதானால் உங்கள் கண்ணுக்கு பெற்றோல் பட்டால் எப்படியோ அப்படித்தான் பிளாஸ்ரிக் புகையும். இதனை மனதில் கொண்டுதான் நாம் பல இன்னல்களையும் சவால்களையும் தாண்டி எமது மாவட்டத்தில் இல்லாததும் கஷ்டமும் ஆன மற்றவர் செய்ய முயற்சிக்காத தொழிலை ஆரம்பித்துள்ளோம். அதில் நூற்றுக்கு ஐம்பது வீதம் வெற்றிபெற்றுள்ளோம்.

அனைத்துவகையான உடைந்த மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை ஒட்டி மீள் பாவனைக்கு கொடுக்கின்றோம். அதற்கு உத்தரவாதமும் அளிக்கின்றோம். அது அப்படி இருக்க, டயானா பிளாஸ்ரிக் மீள் பாவனை துறையின் வளர்ச்சி இப்படித்தான் தற்போது உள்ளது. ஒரு நாளைக்கு 200 கிலோ தொடக் கம் 300 கிலோ வரைக்கும் பழைய பிளாஸ் ரிக்கை வாங்கி அதனை துப்புரவு செய்து மீளவும் பாவனைக்கு அனுப்புகின்றோம்.

நாம் மீள் பாவனைக்கு எடுக்கும் சில பிளாஸ்ரிக் வகைகளின் குறியீடு PP, HDPE, LDP, OPP, PVC, APS, AES, PET வரிசை யாக இந்த வகை குறியீட்டில் நீங்கள் பாவிக்கும் பொருட்கள் சிலவற்றை தருகின் றோம்.



PP - வாளி வகை, HDPE - கான் வகை, LDP - நீங்கள் பாவிக்கும் பிறஸ் வகைகள், OPP - கதிரை வகைகள், APS - வாகன பாட்ஸ், PVC - தண்ணீர்க் குழாய், AES - கொம்பியூட்டர் பாட்ஸ், PET - தண்ணீர் போத்தல் வகைகள். இவை அனைத்தும் எமது நாட்டில் பரவலாகப் பாவிக்கப்படும் பொருட் கள். நாம் பாவிக்கும் பொலித்தீன், Lunch சொப்பின், இன்னும் பல மேலே பார்த்த குறி யீட்டின் படியே பாவனைக்கு எடுக்கலாம்.

இதற்கு நல்ல மார்க்கற் உண்டு. இதைத்தான் நாம் செய்கின்றோம். டயான பிளாஸ்ரிக் உற்பத்தி நிலவரம் எப்படி உள்ளதென்றால் நாம் இப்போதுதான் கீற்ரெக் வகை, சில வகை பிளாஸ்ரிக் கிளிப், உடுப்பு கொழுவும் கிளிப் வகை அனைத்தையும் செய்கின்றோம்.

நீங்கள் தரும் புதிய வடிவங்களையும் உங்கள் கற்பனைக்கு ஏற்ற வகையில் செய்து தரப்படும். எமது உற்பத்திக்கு உத்தரவாதத் தையும் அளிக்க தயாராக உள்ளோம். எமது தொழிலை விரிவுபடுத்த நிறையத் தூரம் இன்னும் செல்லவேண்டியுள்ளது.

எமக்கு எமது மாவட்டத்தை வளர்க்க வேண்டிய பணி நிறையவுள்ளது என்பதை நாம் அறிவோம் அதற்கு நாம் இதற்காக பல உதவிகளை எதிர்பார்க்கின்றோம் என்று இந்த தொழில் நிறுவனத்தின் பணிப்பாளர் தெரி வித்துள்ளார்.

(தொகுப்பு: பா.பார்த்தீபன்)

# மாதர்சங்க கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்

(சுன்னாகம்)

தெல்லிப்பளை சித்தியம்புளி யடி கலைச்செல்வி மகளிர் சி.க.கூ.சங்கம் வருடாந்த மாதர் சங்க பொதுக்கூட்டம் மாதர் சங்கத் தலைவி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தி னராக ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பால கிருஷ்ணன் (ஜீவன்), வலி வடக்கு அமைப்பாளர் இராசரத் தினம் ஜெயபாலசிங்கம் (அன்பு), மாதர்சங்க தலைவி புஸ்பராசா பரமேஸ்வரி, செயலாளர் ஜயா த்துரை நிரஞ்சனா, பொரு ளாளர் குணரத்தினம் முகிர்தா, சிறப்பு விருந்தினராக போரூட் அமைப்பின் தலைவர் சின்னத் தம்பி முருகையா மற்றும் போரூட் உறுப்பினர்களும் கலந் துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய ஜீவன் தோழர், அடுத்தவருடமளவில் மாதர் சங்கத்திற்கு புதிய கட்டடம் ஒன்றையும், பன்முகப்படுத் தப்பட்ட நிதித்திட்டத்திற்கு அமைவாக கலைசெல்வி முன் பள்ளிக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி பெற்றுத் தருவதா கவும் கூறினார். இந்நிகழ்வில் 2013 இற்கான புதிய உறுப் பினர்கள் தெரிவு செய்யப்பட்ட னர். இதன்படி,

தலைவராக தீ.துசேந்தினி, உபதலைவராக பு.பரமேஸ்வரி, செயலாளர் ஐ.நிரஞ்சனா, பொருளாளராக கு.முகிர்தா உபசெயலாளராக செ.வசந்த மாலா மற்றும் நிர்வாக உறுப் பினர்களாக இ.சுபாஜினி, பூ. கஜிதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (95)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கௌவ, படித்த சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. வீட்டில் தங்கியிருந்து வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 077 327 6502, 021 222 2594.

---

A/L விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்த ஆண்கள் இருவர் கட்டட இரசாயனப்பொருட்கள் விற்பனை செய்யும் கம்பனிக்கு தேவை. தொடர்புகளுக்கு: North - East Engineering, Jaffna Road, Manipai. தொலைபேசி இல: 077 756 8686, 021 720 0290.

---

ஒரு பெண்ணின் தலைமையின் கீழ் வீட்டில் இருந்தவாறு கேக் தயாரிப்பில் ஈடுபட, ஆர்வமுள்ள மற்றும் பழக விரும்பும் 18 - 30 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதி மற்றும் மூன்று வேளை உணவும் இலவசம். கல்விப் பொது சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு இருப்பவர்கள் வேலை செய்யலாம். மேலதிக விபரங்களுக்கு: 077 756 3627.

---

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுக்கு 17 தொடக்கம் 50 வயதுக்குட்பட்ட ஆண் - பெண் தேவை. சம்பளம் 18,000 ரூபா 25,000 ரூபா, 32,000 ரூபா, குறைந்த விலைகளில் உணவு, தங்குமிடம் உண்டு. கல்வி அறிவு அவசியமில்லை. தொடர்புகளுக்கு: Sakya Pvt.Ltd. 103/01, ஸ்ரேசன் றோட், வவுனியா. தொலைபேசி இல: 077 556 1883.

---

க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16 தொடக்கம் 55 வயதுக்கிடைப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 25,000 ரூபா. தொடர்பு களுக்கு: 077 303 2004.

---

தனியார் துறைமுகமொன்றில் கப்பல் வேலைகள் செய்வதற்கு 18 இற்கும் 55 இற்கும் இடைப்பட்ட அகவை யுடைய ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. வேதனம் 25,000 ரூபா, 35,000 ரூபா, 40,000 ரூபா. தொடர்புகளுக்கு: 077 303 3803.

---

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள் ளலாம். தொடர்புகளுக்கு: 134, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 077 421 1551.

---

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் வாழைநார் தும்புத் தொழிற்சாலைக்கு முகாமையாளர் மற்றும் பெண் தொழிலாளி தேவைப்படுகின்றனர். கல்வித்தகைமை முகாமையாளர் பதவிக்கு க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பெண் தொழிலாளர் பதவிக்கு எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் 10.02.2013 ஆம் திகதிக்கு முன்னதாக முகாமையாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: முகாமையாளர், வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி வடக்கு நீர்வேலி.

---

20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட அகவையுடைய ஆண் வேலையாட்கள் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல. 72/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு - 13.

---

கொழும்பு - 11 மற்றும் கொழும்பு - 6 இல் உள்ள பிரபலமான புடவைக்கடைக்கு அனுபவமிக்க விற்பனை யாளர்கள் தேவை. தங்குமிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே.இல. 011 464 5349.

---

களஞ்சியசாலை மற்றும் லொறிகளில் வேலை செய்யக்கூடிய லொறி வேலையாட்கள் தேவை. தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். மாதம் 27,500 ரூபாவுக்கு மேல் உழைக்கலாம். தொடர்புகளுக்கு: 071 434 5778, 071 456 3189.

# அமெரிக்க தீர்மானத்தை எதிர்கொள்ள இராஜதந்திரபலம் எம்மிடம் உண்டு

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானத்தை இராஜதந்திர ரீதியில் எதிர்கொள்ளக்கூடிய பலம் எம்மிடம் உண்டு. எனவே அதனை துணிவுடன் முகம் கொடுக்க நாம் தயாராக உள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகளைக் கொண்டுவர அமெரிக்காவும் அதன் பங்காளிகளும் முயற்சித்தால் இலங்கை அதனைத் தடுத்து நிறுத்தும். இந்த நிலைப்பாட்டில் அரசு உறுதியாக உள்ளதென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றகரமான செயற்பாடுகள் குறித்து ஐ.நா. மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு தாம் தெளிவுபடுத்திக் காட்டவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்றைக் கொண்டு வரும் அமெரிக்காவின் முயற்சி குறித்து இதுவரை தமக்கு எவ்விதமான உத்தியோகபூர்வ தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் மூர் கூறியிருந்தார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கருணாதிலக அமுனுகம, இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் காணப்படுகின்றன. இரு நாட்டுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் மேலும பலப்படுத்தப்படுகின்றன என்றார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு முன்னர் பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறுகிய காலத்துக்குள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றி அதில் அரசாங்கம் வெற்றி கண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பிய வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் பற்றித் தெரியும். அரசின் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் திருப்தி வெளியிட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கைக்கு எதிராக பல நாடுகளால் பல கோணங்களில் சவால்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றை முறியடிப்பதற்கு இலங்கைக் குழுவினர் தயாராகவே இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம மேலும் தெரிவித்தார்.

# சர்ச்சைக்கு இங்கு இடமில்லை; சிங்களத்தில் மட்டும் தேசியகீதம்

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெறவுள்ள தேசிய சுதந்திர தினத்தில் வழமைபோல் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. வழமை போன்று இம்முறையும் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் பாடப்படும் என பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். இதில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறாது.

தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும் பாட வேண்டுமென கோரிக்கையை கவனத்திற் கொள்ள முடியாது. இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளிக்கவில்லை என ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

# சுதந்திரதினக் கொண்டாட்டம் திருமலையில் இன்று கோலாகலம்

(திருகோணமலை)

நாட்டின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருமலை நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. அங்கு இன்று சுதந்திர தின நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

65ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் முற்பகல் ஆரம்பமாகவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

'அழகான தாய்நாடு, வளமான நாளை தினம்' என்ற தொனிப்பொருளில் இந்தமுறை சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாடப்படுகின்றன.

சுதந்திரதின நிகழ்வுகளின் மரியாதை அணிவகுப்பின் பொருட்டு சுமார் 4 ஆயிரம் இரணுவத்தினர் பங்கேற்கின்றனர்.

அது போல் பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறப்பாக செய்து முடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.அத்துடன், கலாசார நிகழ்வுகள் பலவும் இடம்பெறவுள்ளன.

# பின்நகர மறுக்கும் வர்த்தக நிலையங்கள்

## பயணிகள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள சில பிரதான வீதிகளில் உள்ள சில வர்த்தக மற்றும் தொழில்சார் இருப்பிடங்கள் வீதியில் இருந்து சற்று உள்வாங்கப்படாத நிலையில் வாகனங்கள், பொதுமக்கள் பல விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது நடைபெற்று வரும் வீதி அகலிப்பின் நிமித்தம் பல வர்த்தக மற்றும் தொழில்சார் இருப்பிடங்கள் சற்றுப் நகர்த்தப்பட்டபோதும், வேறுசில இருப்பிடங்கள் இன்னமும் அதே பழைய இடத்தில் இருந்து செயற்படுவதால் வீதிகளில் அதிவேகமாகப் பயணிக்கும் வாகனங்களால் பொதுமக்கள் விபத்துக்குள்ளாக வேண்டிய அச்சநிலை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக, ஏ-9 வீதியில் டயர் திருத்தகம் ஒன்று இவ்வாறு வீதியோரமாக இருந்து செயற்படுவதோடு, அந்த திருத்தத்திற்கு முன்பாக வாகனங்களும் நிறுத்தி வைக்கப்படுவதால், பாதசாரிகள் மற்றம் துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்போர் மிகுந்த அசௌகரியத்துக்கும் ஆபத்துக்கும் எதிர்நோக்கப்படுவதாக கூறப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை கொள்வதோடு, எவருக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் சம்பந்தப்பட்ட இருப்பிடங்களை சற்றுப் பின் நகர்த்துவதற்கும், பொது மக்கள் அச்சமின்றிப் பயணம் செய்வதற்கும் ஆவன செய்வதற்கு முன்வரவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(138)

# வடமாகாண ஆசிரியர் இடமாற்ற விபரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

வவுனியா தெற்கு வலயத்திலிருந்து இடமாற்றம் பெறுவோர்.

| | |
|---|---|
| MR.M.R.APTHUL SAIEEM | -V/THARULULUM M.V |
| MRS.MERY ALVEENAMMA MOHAN | -V/ADAIKALA ANNAI VID |
| MR.POOSHANI KRISHNAKUMAR | -V/KALNADDYNAKULAM G.T.M.S. |
| MR.KANTHAIYA THANABALASINGAM | -V/POONTHODDAM M.V |
| MRS.ARULNESHAM RAVEENDRAN | -V/SINNATHAMPANAI G.T.M.S. |
| MR.MUTHTHAIYA VILVARAJA | -V/MANIYAKARAN KULAM VIYANANTHA VID |
| MR.NADARASA WIGNESHVARAN | -V/KATKARANKULAM ILANGO VID |
| MRS.KANAGALINGAM INPANAYAGI | -V/KALLARU SRISITHIVINAYAGAR VID |
| MR.SHAMSUTHEEN MOHAMED JABIR | -V/AL-HAMIYA VID |
| MR.S.KODUTHOR MARIYANAYAGAM | -V/PAVATKULAM M.V. |
| MRS.I.NAVAKANTHAN | -V/NITHTHIYANAGAR LOGESWARA VID |
| MR.SEBASTHIYAN PUSPANATHAN | -V/ANPUPURAM NAMAGAL VID |
| MR.D.M.SAMAN DISSANAYAKA | -V/AGRAPOTHYVID |

# வடபகுதி வீடமைப்பில் முறைகேடு; இந்தியா உடன் தலையிட வேண்டும்

## மனோகணேசன் கோரிக்கை

(கொழும்பு)

இந்திய அரசின் உதவியுடன் வடக்கில் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டத்தில், குளறுபடி நிலைமைகள் ஏற்பட்டுள்ளது எனவே இந்திய அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய அரசின் வீடமைப்பு திட்டம் நடைமுறையாகும் முறைமை குறித்து எழுந்துள்ள பதட்ட நிலைமைகள் பற்றி மன்னார், வவுனியா மாவட்டங்களில் வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்த புகார்களை அடுத்து, இது தொடர்பில் கொழும்பில் உள்ள இந்திய தூதர் அசோக் கே காந்தாவுக்கு தனது கருத்துகளை அறிவித்துள்ளதாக கூறிய மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய அரசின் இந்த வீடமைப்பு திட்டத்தில் கட்டப்படும் வீடுகளை தமது அதிகாரத்தை கொண்டு ஒரு பிரிவினர் துஷ்பிரயோகம் செய்வதாக பரவலாக புகார்கள், மக்கள் கண்காணிப்பு குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டம் மூலம் கட்டப்படும் வீடுகளைப் பெறுகின்ற பயனாளிகள் பாதிக்கப்பட்ட மக்களாக இருக்க வேண்டும். அரசியல்வாதிகளின் நோக்கங்களை முன்னிறுத்தி நடைமுறையாகி, இறுதியில் இந்த உதவி திட்டம் இனங்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்தும் உபத்திரவமாக முடிந்துவிடக்கூடாது. எனவே இத்திட்டம் நடைமுறையாவதை கண்காணிக்கும் அதிகாரத்தை நிதி உதவி செய்யும் இந்திய அரசு கேட்டு பெற வேண்டும். நல்லது செய்ய வந்து, இந்தியா கஷ்டத்தில் விழுந்து விடக்கூடாது. இது இந்தியாவிற்கு நாம் சொல்லும் நல்லெண்ண எச்சரிக்கை.

பெரும் ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்ட இந்திய அரசின் வீடமைப்பு திட்டம் நீண்ட காலமாக முடிவின்றி தொடர்கிறது. இந்த திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறைமையும், பயனாளிகளின் பெயர்களும் ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்களா என்பது பற்றி கண்காணிப்பு செய்யப்படவேண்டும். இதை தமது அரசியல் நோக்கங்களுக்காக எவராவது பயன்படுத்துகிறார்களா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு நிதி உதவி செய்யும் இந்திய அரசுக்கு இருக்கிறது. இந்[த] பொறுப்பை இந்திய அரசு உதா[]சீனம் செய்யக்கூடாது.

உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களைப் பயனாளிகளாக முறைப்படி அடையாளம் கண்டு அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படாவிட்டால், இனங்கள் மத்தியில் விரிசல் ஏற்படலாம் அதற்கான பதட்டம் இன்று சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் நிலவுகிறது. இது விரும்பத்தக்கது அல்ல.

எனவே இந்திய அரசு தாம் நிதி உதவி செய்யும் இந்த வீடமைப்பு திட்ட வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதை கண்காணிக்க வேண்டும். இது முறைப்படி நடைபெறாவிட்டால், தவறுகளுக்கு இந்திய அரசும் பொறுப்பு ஏற்கவேண்டி வரும். யுத்தத்தில் அழிந்த வீடுகளை தமது குடிமக்களுக்கு கட்டி கொடுப்பது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு. இதையே இன்று இந்திய அரசு முன்வந்து செய்கிறது.

எனவே, இந்திய அரசுக்கு கண்காணிப்பு அதிகாரம் வழங்கப்படாமலும், மறுபுறம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநீதியும் இழைக்கப்படு மானால் இந்த திட்டத்தில் இந்திய அரசு சம்பந்தப்பட்டு என்ன பயன் என கேள்வி எழுப்பியுள்ளார்.

(01) ஒழுங்கற்றிருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.
1. பணத்தை / கண்மூடித்தனமாக / செய்யாதே / செலவு / வீணே
..............................................................................................

2. அவதானிக்கும் / அவன் / ஒரே / நூறு / நேரத்தில் / விடயங்களை / உடையவன் / ஆற்றல்
..............................................................................................

(02) கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.
1. தலைக்கனம் : ..............................................
2. காது கொடுத்தல் : ..............................................

(03) பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.
1. மயூரன் நன்றாக பாடல் பாடுவான்
2. கண்ணன் நன்றாகப் பாடல் பாடுவான்
..............................................................................................

(04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
1. மே மாதம் 1 ஆம் திகதி .............................................. தினம்
(தொளிலாழிகள் / தொலிளாறிகள் / தொழிலாளிகள்)

2. மக்கள் கள்வனை .............................................. காட்டினர்
(அடயாளம் / அடையாளம் / அடையாலம்)

(01) ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குமான பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
1. பென்சில் .............................. 3. அலுவலகம் ..............................
2. பலூன் ..............................

(02) பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.
1. can I help you? ..............................................
2. please give me a book ..............................................
3. I want to rest ..............................................
4. what are you doing? ..............................................

(03) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. .............................................. ஒபட ஒன மொனவத?
2. .............................................. மட்ட தே ஒணே?
3. ..............................................மகே பொத்த கோயித?

(04) பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்களத்தில் எழுதுக.
1. சொல்லுங்கள் : ..............................................
2. உங்கள் பெயர் என்ன? : ..............................................
3. சாப்பிட்டீங்களா? : ..............................................

(05) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
01. பின்வரும் விதைகளில் எவ்விதை சிறியது?
1. பலாவிதை 2. மிளகு 3. ஆலம்விதை
02. இலங்கையின் தேசிய மரம்
1. நாகமரம் 2. நாவல்மரம் 3. வேப்பமரம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 34



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

1) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள தாவரம் எது?

உணவாகப் பயன்படும் தாவரம். ஆணிவேரில் உணவு சேமிக்கும் இதிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படும்.


(1) (2) (3)


2) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விளையாட்டு எது?

(1) (2) (3)


இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வெளியக விளையாட்டு, ஓர் அணியில் 11 வீரர்கள் விளையாடுவர். இலங்கையில் மிகப் பிரபலமான விளையாட்டு.

3) தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள ஒவ்வொரு உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.




உருக்களுக்கு இடையிலான தொடர்பை சரியாகக் காட்டும் விடையின் கீழ்க்கோடிடுக.

1) AG / DF / BE / CH
2) AD / BC / FG / EH
3) AG / BE / CF / DH

பின்வரும் பாடலை வாசித்து விடை தருக.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

4) பாடலில் நல்லார் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யார்? ..............................................
1) மிகவும் வறுமையில் வாடும் ஒருவர். 2) நற்குணங்கள் உடைய ஒருவர்.
3) பிறருக்கு உதவி செய்யும் ஒருவர்.

5) இப்பாடலில் வரும் கல்மேல் எழுத்துப்போல் என்ற தொடரின் கருத்து யாது?

1) கல்லில் செதுக்கப்பட்ட எழுத்து. 2) என்றும் அழியாது நிலைத்திருக்கும்.
3) கல்லின் மேல் எழுதுவதைக் குறிக்கும்.

**கீழே தரப்பட்டுள்ள உருக்களில் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க.**

1)  2)  3) 

பின்வரும் விலைப்பட்டியலை வாசித்து விடை தருக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| A - சீனி | ஒரு கிலோ கிராம் | 52.00 |
| B - பருப்பு | 500 கிலோ கிராம் | 45.00 |
| C - தேயிலை | 250 கிலோ கிராம் | 100.00 |
| D - கடலை | ஒரு கிலோ கிராம் | 78.00 |
| E - மாசி | 100 கிராம் | 45.00 |

7) பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் விடை எது?

1) ABDCE 2) ECBDA 3) ECDBA

8) விலைப்பட்டியலிலுள்ள ஒவ்வொரு பொருளையும் ஒரு கிலோகிராம் வீதம் கொள்வனவு செய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்?

1) ரூபா 968.00 2) ரூபா 1031.00 3) ரூபா 1070.00

9) எதிர்ச்சொல் தருக.

1. ஆக்கம் :..........................................
2. ஏறி :..........................................
3. வெளியே :..........................................

10) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. Snake :.......................... 2. Library :..........................
3. Crow :.......................... 4. Hospital :..........................

**பின்வரும் பொருட்களுள் நீரில் கரையும் பொருட்கள், நீரில் கரையாத பொருட்கள் என வகைப்படுத்துக.**
(மண்ணெண்ணெய், வினாகிரி, உப்பு, தேங்காயெண்ணெய், டீசல், குளோரின், சவர்க்காரம்)

| நீரில் கரையும் பொருட்கள் | நீரில் கரையாத பொருட்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |



**சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1. ஆணிவேர்த் தாவரம் கிளைகளைக் கொண்டது ஆகும். (......................)
2. மழை காலங்களில் காலையில் சூரியன் உதயமாகும்போது மேற்குத் திசையில் வானவில் தோன்றும். (......................)
3. சிலந்தி தனது வலையைத் தனது எச்சிலினால் பின்னும். (......................)
4. மர அணில் இலங்கைக்கு உரித்தான விலங்கினம் அல்ல. (......................)
5. ஆயிரம் ரூபாய் நாணயத்தாளின் நிறம் பச்சை ஆகும். (......................)

**பின்வரும் வினாக்களுக்குரிய விடை தருக.**

1. கம்மாலையில் நெருப்பு எரியக் காற்று வழங்கும் உபகரணம்
..........................................
2. தலதா மாளிகை அமைந்துள்ள இடம்
..........................................
3. தோற் கருவிகள் இரண்டைக் குறிப்பிடுக.
..........................................
4. இரை மீட்கும் பிராணி ஒன்றைத் தருக.
..........................................
5. தச்சன் பயன்படுத்தும் உபகரணங்கள் 2 ஐக் குறிப்பிடுக.
..........................................

**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. ஆடை நெய்பவன் | குயவன் |
| 2. நகை வேலை செய்பவன் | கொல்லன் |
| 3. சட்டி, பானை செய்பவன் | நெசவாளி |
| 4. கத்தி, கோடரி செய்பவன் | விவசாயி |
| 5. மரத்தளபாடம் செய்பவன் | பொற்கொல்லன் |
| 6. வயலில் வேலை செய்பவன் | மேசன் |
| 7. கட்டட வேலை செய்பவன் | தச்சன் |

01. 10000, 1000, 100, 10,.............................. எனும் எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.

01. 00:12 மணியை சாதாரண கடிகார நேரத்தில் எழுதுக.
..........................................

02. பென்சிலொன்றின் விலை ரூபா 5.75 ஆகும். அழிறப்பர் ஒன்றின் விலை ரூபா 2.25 ஆகும். அதன்படி, அவ்விரண்டினதும் விலைகளின் கூட்டுத்தொகை யாது?
..........................................

03. பொதுவித்தியாசம் 8 ஆகவுள்ள எண்கோலமொன்றை எழுதுக.
..........................................

04. தாயக்கட்டை ஒன்றின் ஒருபக்க நீளம் 1 சென்ரிமீற்றர் ஆகும். அதன்படி அத்தாயக்கட்டையின் அனைத்து முகங்களினதும் பரப்பளவு யாது?
..........................................

# இஸ்லாமிய அமைப்புகளுடன் சமரசம்
# "விஸ்வரூபம்" விரைவில் வெளிவரும்

(புதுடில்லி)

இஸ்லாமிய அமைப்புகளுடன் கமல் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. இதையடுத்து கமல் தலைமைச்செயலகத்தில் செயதியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர், வணக்கம். இந்த ஒரு சந்திப்பு ஏற்படுவதற்கு ஆவன செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இன்று அரசு விடுமுறை நாளாக இருந்தும், வந்திருந்து கிட்டத்தட்ட 6 மணிநேரம் எங்கள் வாதங்களை எல்லாம் கேட்டு, அமைதியாக அறிவுரையும், ஆறுதலையும் சொன்ன உள்துறை செயலாளர் அவர்களுக்கு என் நன்றி.

இங்கு நான் சொன்னபடி என்னுடைய இஸ்லாமிய சகோதரர்களுடன் பேசி, அவர்களின் குறைகள் என்ன என்பதை தெரிந்துகொண்டு, என்னால் என்ன இயலும் என்பதையும், தொழில்நுட்ப பிரச்சினைகளையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, இருவரும் அவரவர் தரப்பில் இருந்து செய்யக்கூடிய உதவிகளை செய்துகொண்டு, திரைப்படத்தில் சில காட்சிகளில் ஒலிக்குறிப்புகளை மட்டும் நீக்க சம்மதம் தெரிவித்துள்ளேன்.

எங்கள் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்ட ரின் மனுவை பின்வாங்கிக் கொள்ள நாங்கள் முன்வருகிறோம். அதேபோல் இந்த தடை உத்தரவும் பின்வாங்கப்படும். இதை சுமுகமாக முடித்து வைத்த தமிழக அரசுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



எனக்கும் என் இரசிகர்களுக்கும் முக்கியமான அறிவிப்பு ஒன்று உடனடியாக ரிலீஸ் திகதியை அறிவிக்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார்.

# வெளிவருகிறது "வனயுத்தம்"
# வீரப்பனின் வரலாற்றில் நறுக்கு

(புதுடில்லி)

தயாரிப்பாளரான ஏ.எம்.ஆர். ரமேஷ் வனயுத்தம் என்ற பெயரில் வீரபபனின் என்கவுண்டர் செய்யப்பட்ட சம்பவத்தை படமாக எடுத்துள்ளார். கன்னடத்தில் இப்படம் வ்ரப்பன் அட்டகாசா என்ற பெயரில் தயாரானது.

இந்தப் படத்தில் வீரப்பனாக கிஷோரும், பொலிஸ் அதிகாரி விஜயகுமாராக அர்ஜுனும், வீரப்பன் மனைவி முத்துலட்சுமியாக அகத்தியன் மகள் விஜயலட்சுமியும் நடித்துள்ளனர்.

வனயுத்தம் படத்தில் என்னை தவறாக சித்தரித்து உள்ளனர் என்று கூறி வீரப்பன் மனைவி முத்துலட்சுமி வழக்குப் போட்டுள்ளார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் முத்துலட்சுமி-வீரப்பன் இணைந்துள்ள காட்சிகளை நீக்கி விட்டு படத்தை வெளியிடலாம் என்று தீர்ப்பளித்தது.

இதனால் வீரப்பன் மனைவி முத்துலட்சுமியாக விஜயலட்சுமி நடித்துள்ள பெரும்பாலான காட்சிகள் நீக்கப்பட்டு, வருகிற 14 ஆம் திகதி படம் வெளிவருகிறது. தனது காட்சிகள் நீக்கப்படுவது விஜயலட்சுமிக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழகத்தில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கை மீது பன்னாட்டு விசாரணை நடத்த கோரி, தமிழகம் முழுவதும் எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக மக்கள் நல்வாழ்வு இயக்க ஒருங்கிணைப்பாளர் கண.குறிஞ்சி, மதிமுக பொது செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன், திரைப்பட இயக்குனர் தங்கராஜ், பேராசிரியர் சரஸ்வதி ஆகியோர் நேற்று அளித்த பேட்டியில்,

மக்கள் நல்வாழ்வு இயக்கம் சார்பில் லயோலா கல்லூரி பி.எட். அரங்கில் தமிழீழ இனப் படுகொலையும், தமிழ்சங்கத்தின் கடமையும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

பெப்ரவரி இறுதி வாரத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கூட்டம் நடக்கிறது. இதில், 47 நாடுகள் கலந்து கொள்கின்றன. இதில், இலங்கை அரசுக்காக இந்தியா சார்பு நிலையை எடுக்க கூடாது.வரும் 12 ஆம் திகதி மெரினா கடற்கரையில் ஈழத்தமிழர் சுடர் ஒளி ஏற்றப்படும்.

இலங்கை அரசு மீது பன்னாட்டு விசா ரணை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி மார்ச் 4 ஆம் திகதி தமிழகம் முழுவதும் கட்சி சார்பற்ற ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

சென்னையில் இலங்கை தூதரகம் முன்பு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# குண்டுத் தாக்குதல் முயற்சி தோல்வி
# இரயில் பயணிகள் உயிர் தப்பினர்

(கோக்ராஜ்கர்)


அசாமில் ரயில் தண்டவாளத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததால் பரபரப்பு காணப்பட்டது. அசாமின் கோக்ராஜ்கர் மாவட்டத்தில் நேற்று கேபாரி ரயில்நிலையம் நோக்கி ஹவுராக்- கவுகாத்தி செல்லும் கரிபிராத் கடுகதி ரயில் வந்து கொண்டிருந்த போது, கேபாரி இடையே தண்டவாளத்தில் திடீரென சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் எதுவும் ஏற்பட வில்லை. இந்த குண்டுவெடிப்பில் தண்டவாளம் பலத்த சேதம் அடைந்தது.

அசாமில் செயற்பட்டு வரும் பிரிவினைவாத அமைப்பு ஒன்று இந்தச் சதி செயலுக்கு காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# தலை தப்பியது



(சாப்ரா)

பீகாரில், நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டிருந்த மேடை உடைந்ததில், ராஷ்டிரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ் காயமின்றி தப்பினார். பீகார் மாநிலம், சரண் மாவட்டத்திலுள்ள சாப்ரா என்ற இடத்தில், நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில், லாலு பிரசாத் யாதவ் கலந்து கொண்டார்.

அப்போது, நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டிருந்த மேடை திடீரென உடைந்து விழுந்தது. மேடையில் அதிகம் பேர் நின்று கொண்டிருந்ததால், பளு தாங்காமல் மேடை உடைந்ததாக நேரில் பார்த்தவர்கள் கூறினர். எனினும் லாலு பிரசாத் யாதவ் காயமின்றித் தப்பினார்.

# எதிர்ப்பையும் தாண்டிய புதிய சட்டம்
# பாலியல் குற்றத்துக்கு மரணதண்டனை

(புதுடில்லி)

பாலியல் வன்முறை குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் மத்திய அரசின் அவசர சட்டம் ஜனநாயக விதிமுறைகளுக்கு விரோதமானது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி குற்றம்சாட்டி உள்ளது.

டில்லியில் ஓடும் பஸ்சில் கொடூரமாக கற்பழிக்கப்பட்ட 23 வயது மாணவி மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, பெண்களின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்ய நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் மத்திய அர்சு கமிட்டி ஒன்றை அமைத்தது. அந்தக் குழு கற்பழித்து கொலை செய்யும் குற்றத்துக்கு சிறைத் தண்டனையை 20 ஆண்டுகளாக அதிகரிக்கலாம், கும்பலாக சேர்ந்து கற்பழிக்கும் குற்றத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கலாம் என்பது உள்ளிட்ட சிபாரிசுகளை மத்திய அரசுக்கு வழங்கி இருக்கிறது.

அவசர சட்டம் இந்த நிலையில் நேற்று முன்தினம் நடந்த மத்திய மந்திரிசபை கூட்டத்தில் வர்மா கமிட்டியின் சிபாரிசுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

அந்த கூட்டத்தில், கற்பழிப்பு உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையை கடுமையாக்குவதற்காக அவசர சட்டம் ஒன்றை இயற்ற ஒப்புதல் வழங்கப்பட்டது. கற்பழிக்கப்பட்ட பெண் இறந்து விட்டால் அல்லது கோமா நிலைக்கு தள்ளப்பட்டால் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை விதிக்க இந்த அவசர சட்டம் வகை செய்யும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு எதிர்ப்பு மத்திய அரசின் இந்த அவசர சட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளது. இதுகுறித்து அக்கட்சியின் உயர்மட்ட குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது,

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவங்களில் குறறவாளிகளுக்கு தண்டனையை கடுமையாக்கும் வகையில் மத்திய அரசு அவசர சட்டம் கொண்டு வரத் தீர்மானித்து இருப்பது நீதிபதி வர்மா கமிட்டியின் சிபாரிசுகளுக்கு அநீதி இழைப்பது போல் உள்ளது. மிகவும் அபூர்வமான நிகழ்வுகளில்தான் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று வர்மா கமிட்டி கூறி இருப்பதற்கு எதிராக மத்திய அரசின் முடிவு அமைந்து இருக்கிறது.

மேலும் நாடாளுமன்ற கூட்டத் தொடர் இன்னும் 3 வாரங்களில் தொடங்க இருக்கும் நிலையில் இப்படி ஒரு அவசர சட்டத்தை கொண்டு வர தீர்மானித்தது ஜனநாயக விதிமுறைகளுக்கு விரோதமானது ஆகும். இராணுவத்தினரையும் குற்றவியல் சட்ட வரம்புக்குள் கொண்டு வரவேண்டும் என்பது உள்ளிட்ட சில பிரச்சினைகளில் இருந்து மக்களை திசை திருப்பவே மத்திய அரசு இப்படி ஒரு அவசர சட்டத்தை கொண்டு வர தீர்மானித்து இருப்பதாக தெரிகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனநாயக மாதர் சங்கம் இதேபோல் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கமும் மத்திய அரசின் அவசர சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறது. இது தொடர்பாக அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வர்மா கமிட்டியின் சிபாரிசுகளை மத்திய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் சிலவற்றை மட்டும் ஏற்றுக் கொண்டு தன் விருப்பம் போல் செயற்பட விரும்புவது சரியான நடவடிக்கை அல்ல என்று கூறி இருக்கிறது.

## முரசின் பிறந்த நாள் வாழ்த்துகள்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

பெயர்: அ.சிறான்
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

அகவை 4இல்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தற்கொலைக்கு முயலும் அமெரிக்க படை வீரர்கள்

## - வெளிவர மறுக்கும் உண்மைகள்



அமெரிக்காவின் முன்னாள் இராணுவ சிப்பாய்கள் சராசரியாக ஒரு நாளைக்கு 22 பேர் தற்கொலை செய்து கொள்வதாக அமெரிக்காவின் முக்கிய அரசாங்க ஆய்வு ஒன்று கண்டறிந்துள்ளது.

ஒரு நாளைக்கு சராசரியாக 18 பேர் இவ்வாறு இறக்கிறார்கள் என்று முன்னர் கூறப்பட்டதைவிட இது சற்று அதிகமாகும். சுமார் 60 வயதைச் சேர்ந்த முன்னாள் இராணுவ சிப்பாய்களே இவ்வாறு அதிகமாக தற்கொலை செய்துகொள்வதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இதுவரையிலான ஆய்வுகளில் மிகவும் பரந்துபட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுகளின்படி, இறந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் 50 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். 1990 முதல் 2010 ஆம் ஆண்டுவரையிலான காலப் பகுதியை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள், தற்கொலை செய்துகொள்ளும் அமெரிக்க முன்னாள் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று கூறும் இரு வாரங்களுக்கு முன்னர் வெளியான தகவல்களை உறுதி செய்கின்றன.

சிலர் இராணுவத்தில் இருந்து விலகி முதல் சுமார் 4 வாரங்களில் தற்கொலை செய்வதற்கான சாத்தியம் அதிகம் என்றும், அந்தக் காலப்பகுதியில் பலமான கண்காணிப்பும், விடய முகாமைத்துவமும் தேவை என்றும் கூறப்படுகிறது.

பெரும்பாலானவர்கள் அளவுக்கு அதிகமாக போதை மருந்தை உட்கொள்ளல் அல்லது விசம் அருந்துதல் ஆகியவை மூலமே தற்கொலைசெய்து கொள்கிறார்கள். இவர்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.


# அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்;

# அதிநவீன யுத்த விமானம் ஈரான் வசம்

(தெக்ரான்)

ஈரான் ஒரு சர்ச்சைக்குரிய நாடாக திகழ்கிறது. அங்கு சர்வதேச விதிமுறைகளுக்கு மாறாக அணு ஆயுதங்கள் தயாரிப்பதாகவும், நீண்ட தூரம் சென்று தாக்க கூடிய ஏவுகணைகளை தயாரிப்பதாகவும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலையில் தற்போது தனது சொந்த நாட்டின் தொழில் நுட்ப உதவியுடன் அதிநவீன போர் விமானத்தை ஈரான் தயாரித்துள்ளது. அதற்கு குயாகப் எப் - 31ஏ. (வெற்றியாளர்) என பெயரிட்டுள்ளனர். இந்த தகவலை அந்நாட்டு அதிபர் முகமது அகமதினேஜத் நேற்று முன்தினம் அறிவித்தார்.



மேலும், அந்த விமானத்தை பார்வையிட்ட அவர் அதன் தொழில் நுட்பத்தை விமானியிடம் கேட்டறிந்தார். உலக நாடுகளில் இருக்கும் அதிநவீன போர் விமானங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும் என கூறிய அவர் இதை ஒரு 'குறுவாள்' என வர்ணித்தார்.

இந்த விமானத்தை பல ஆயிரம் மணி நேரம் விமானிகள் பரிசோதித்ததாகவும் அதன் செயல்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் இருப்பதாகவும் கூறினார்.

1979 ஆம் ஆண்டு புரட்சி தினத்தின் 34 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் தெக்ரானில் நடந்தது. அதனைத் தொடர்ந்து இந்த புதிய போர் விமானத்தை அவர் வெளியுலகத்துக்கு அறிமுகப்படுத்தினார். அக்காட்சி அரசு டி.வி.யில் ஒளிபரப்பப்பட்டது.

உலகச் செய்திகள்

# பிரிட்டிஷ் பொலிஸ் சேவையில் அமெரிக்க அதிகாரிகள் இணைப்பு

(லண்டன்)

பிரிட்டன் பொலிஸ் பிரிவில் தலைமை அதிகாரிகள் பதவியில், வெளிநாட்டை சேர்ந்தவர்களை பணியமர்த்த அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

முதல்க் கட்டமாக அமெரிக்காவை சேர்ந்த பிரபல பொலிஸ அதிகாரியான பில் பிராட்டனை, லண்டன் பெரு நகர பொலிஸ் துறைத் தலைவராக பணியமர்த்த, பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

நியூயார்க் மற்றும் லாஸ் ஏஞ்சல்சில் குற்றங்களை குறைக்க சிறப்பான நடவடிக்கை எடுத்தவர் பில் பிராட்டன். இது பொலிஸ் துறை சீர்திருத்த நடவடிக்கைளில் ஒன்றாகும். தகுதியான தலைமை அதிகாரிகளை தேர்வு செய்வது, பொலிஸ் துறையின் எதிர்காலத்துக்கு மிகவும் முக்கியமானது என, பிரிட்டன் பொலிஸ்துறை அமைச்சர் டேமியன் க்ரீன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் போலீஸ் தேர்வில், கடந்த, 30 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய மாற்றமாக இது கருதப்படுகிறது. உலகிலேயே மிக சிறப்பாக செயற்படும் பிரிட்டன் போலீஸ் துறைக்கு, வெளிநாட்டு நபர்களை பணியமர்த்த அரசு முடிவு செய்திருப்பது ஆச்சரியமளிக்கிறது. அரசின் இந்த திட்டத்துக்கு ஆதரவு அளிக்கப் போவதில்லை என பொலிஸ் துறை கூட்டமைப்பின் துணைத் தலைவர் ஸ்டீவ் வைட் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானில் பூகம்பம்

(டோக்கியோ)

ஜப்பானில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இந்த பூகம்பம் ஜப்பானின் ஒபிஹிரோ நகரை மையமாக வைத்து ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.9 என பதிவான இந்த பூகம்பம் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை. பூகம்பத்தை தொடர்ந்து நில அதிர்வுகளும் ஏற்பட்டது. ஒரு சில தேசிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# இரட்டை முகத்துடன் அமெரிக்கா; இராணுவ மொழியில் பதிலடி

## – மிரட்டுகிறது வடகொரியா

அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி தருவோம் என்று வட கொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வட கொரிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளரிடம் கொரியன் மத்திய செய்தி நிறுவனம் சனிக்கிழமை கேட்டபோது கருத்துக் கூற மறுத்து விட்டார். தென கொரியா புதன்கிழமை ரொக்கெட் ஒன்றை ஏவியது.

இது இராணுவம் தொடர்பானது அல்ல என்று அமெரிக்கா கருத்து தெரிவித்தது. அதேசமயம், கடந்த டிசம்பர் மாதம் வட கொரிய ஏவிய ரொக்கெட் தடை செய்யப்பட்டது என்று அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது.

இதைத் தொடர்ந்தே அமெரிக்காவின் இத்தகைய இரட்டை நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி தருவோம் என்று வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிகிறது. ரொக்கெட் ஏவியதற்காக, ஐ.நா.சபையின் பாதுகாப்பு கவுன்சில், வடகொரியா மீது சமீபத்தில் பொருளாதாரத் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது. கொரிய நாடுகள் இரண்டும், தங்களின் செயற்கைக்கோள் நன்கு வேலை செய்வதாக தெரிவித்தன. ஆனால், வடகொரிய செயற்கைக்கோள் பிழையாக இயங்கி வருவதாக அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


# வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு மலேசியாவில் புதிய விதிமுறை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் வெளிநாட்டு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களிடம் வசூலிக்கப்பட்டு வந்த வரியை இனிமேல் அந்த தொழிலாளர்களே செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

மலேசியாவில் கட்டுமானத் தொழில் உட்பட பல்வேறு துறைகளில் பெரும்பாலும் வெளிநாட்டு தொழிலாளர்களே பணியாற்றுகின்றனர். அந்நாட்டில் 24 இலட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இதனால், தொழிலாளர்களிலும் இந்தியர்கள் அதிகமாக உள்ளனர். அங்கு வெளிநாட்டு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் அதற்கெனத் தனி வரி செலுத்த வேண்டும்.

தற்போது, அந்த வரியை அந்தந்த தொழிலாளர்களின் ஊதியத்தில் செலுத்துவதற்கு மலேசிய அரசு உத்தரவிட்டுள்ளது. இது உடனடியாக அமுலுக்கு வருகிறது. இது பற்றி அந்நாட்டு நிதியமைச்சர் அகமத் ஹுஸ்னி ஹனாஜியா வெளியிட்ட அறிக்கையில்



கூறியதாவது,

இந்த ஆண்டில் குறைந்தபட்ச ஊதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இதன் மூலம், தொழிலாளர்களுக்கு மலேசிய கரன்சியான ரிங்கிட்டில் (ஒரு ரிங்கிட் ஸ்ரீ ரூ.17.11) சுமார் 30 முதல் 50 சதவீதம் ஊதியம் உயர்ந்துள்ளது. அதாவது, 600 முதல் 700 ரிங்கிட் ஆக இருந்து ஊதியம் 900 ரிங்கிட்(இந்திய ரூபாய் 12,000) வரை உயர்ந்துள்ளது. எனவே, புதிய வரி விதிப்பினால் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு பெரிய பாதிப்பு இல்லை. இவ்வாறு அறிக்கையில் அகமத் தெரிவித்துள்ளார்.

# மதுபோதைக்கு அடிமையானவர்களுக்கு விரைவில் கிடைக்கும் விடுதலை



(வாஷிங்டன்)

குடிப்பழக்கத்தை நிறுத்தும் புதிய மருந்து ஒன்றை சிலி நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இது நடைமுறைக்குவரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களால், அதை அவ்வளவு எளிதாக விட்டுவிட முடிவதில்லை. இதனால் இது ஒரு சமூக பிரச்சினையாகவே கருதப படுகிறது. ஆனால், இரசாயன மாற்றத்தால் ஏற்படும் இந்த தூண்டுதலை இரசாயனம் கொண்டே சரி செய்துவிடலாம் என்கிறார், சிலி நாட்டைச் சேர்ந்த ஆசின்ஜோ என்ற ஆராய்ச்சியாளர். இந்த புதிய மருந்தை ஊசி மூலம் உட்செலுத்தப்படும் பட்சத்தில், அதன் தாக்கம் குறைந்தபட்சம், ஆறு மாதம் முதல், ஒரு ஆண்டு வரை நம் உடலில் நிலைத்திருக்கும்.

எனவே, மது குடிக்க வேண்டும் என்ற தூண்டுதலை இது பெருமளவில் தடுத்துவிடுகிறது. அதையும் மீறி மது குடிக்கும் பட்சத்தில் வாந்தி, மயக்கம், நெஞ்சு எரிச்சல், உடல் பல வீனம் போன்றவை ஏற்படும். இந்த மருந்து செயல்படும் விதம் குறித்து இந்தியாவிலும் விரைவில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த சோதனை வெற்றிகரமாக முடியும் பட்சத்தில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த மருந்து சந்தையில் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு ஆசின்ஜோ கூறினார்.

# திருமுறிகண்டி மக்களின் கோரிக்கை; கிராம சேவையாளர் நியமனம்



திருமுறிகண்டிப் பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அப்பகுதிக்குப் புதிதாக கிராம சேவையாளர் ஒருவரை நியமிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட பணிப்புரை விடுத்துள்ளார். திருமுறிகண்டி ஆலய மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கோயிலின் வழிபடுவோர் சபை, கிராம அபிவிருத்தி சங்கம், வர்த்தக சங்கம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அரச திணைகளங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்தப் பணிபுரை வழங்கியுள்ளார்.

திருமுறிகண்டிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்குள்ள கோயிலின் வழிபடுவோர் சபை மற்றும் துறை சார்ந்தோர்களுடன் கலந்துரையாடி, கோயில் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக கோவிலுக்கு முன்பாகவுள்ள வர்த்தக நிலையங்களால் ஏ-9 வீதியால் பயணிக்கும் மக்கள் கோவிலை முழுமையாகத் தரிசிக்கவோ, பார்க்கவோ முடியாத நிலையுள்ளதைக் கருத்தில்கொண்டு அவ்வர்த்தக நிலையங்களை இடமாற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை, அங்குள்ள ஏனைய வர்த்தக நிலையங்களுக்கு மின்னிணைப்பை வழங்குவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

அத்துடன் இந்துசமய கலாசார திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவே வழிபடுவோர்சபை மற்றும் இதர செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் இவற்றை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் கண்காணிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கோவில் சுற்றாடலில் மாமிச பாவனையை முற்றாக தடைசெய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அதற்கு துறைசார்ந்தோர் உரிய கவனம் செலுத்தவேண்டுமெனவும், வழிபடுவோர் சபைக்கான புதிய நிர்வாகத்தை எதிர்வரும் 11 ஆம் திகதி தெரிவு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, அப்பகுதி மககளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக திருமுறிகண்டி (எம்.யு.எல் - 75) பிரிவிற்கு புதிய கிராம சேவையாளர் ஒரு வரை நியமிப்பதற்கு அமைச்சர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வருகை தந்திருந்த மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

மேற்படி விடயங்கள் தொடர பில் சம்பந்தப்பட்டோர் சகிதம் எதிர்வரும் 10 ஆம் திகதி கலந்துரையாடலொன்று நடைபெற விருப்பதாகவும், சம்பந்தப்பட்டவர்களினால் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் பிரபாகரன், ஒட்டுசுட்டான உதவி அரசாங்க அதிபர் திரேஸ்குமார், மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச சபை செயலாளர் மிதிலைநாதன், முல்லைத்தீவு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மோகன், உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## அமெரிக்க...

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தீர்மானத்தை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள உறுப்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக எத்தகைய முடிவினை எடுப்பது என்பது குறித்து சில உறுப்பு நாடுகள் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. ஆனால் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்துள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கண்காணித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமை...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவொன்று தென்னாபிரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளது. முரண்பாடு தீர்த்தல், உண்மை மற்றும் நல்லிணக்கம் பற்றிய தமது சொந்த அனுபவங்களை பகிர்ந்துகொள்ள தென்னாபிரிக்க மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகியன மேற்கொண்ட முன்னெடுப்புக் காரணமாகவே இத்தூதுக்குழு தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ளது.

தென்னாபிரிக்க வெளிவிவகார பிரதியமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவொன்று 2011 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது இவ்வாய்ப்பை இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வழங்க முன்வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதை ஏற்றுக்கொண்டது.

இலங்கை அரசாங்கம் ஜனவரி 2011 இல் த.தே.கூட்டமைப்புடன் இனப்பிரச்சினை தொடர்பில் பேச ஆரம்பித்தது. த.தே.கூ. நேர்மையாகவும் முழுமனதுடனும் செயற்பட்டு அரசியல் தீர்வொன்றுக்கான முழுமையான முன்மொழிவுகளை மார்ச் 2011 இல் சமர்ப்பித்தது. இலங்கை அரசாங்கம் தமது பக்கக் கருத்துக்களை, 5 மாத காலத்தில் 7 கூட்டங்கள் நடந்தபோதும் முன்வைக்கத் தவறியது. இதனால் அடுத்த கூட்டத் திகதியொன்றுக்கு ஒப்புக்கொள்ள த.தே.கூ. மறுத்தது.

இதன் பின்னர் ஜனாதிபதி த.தே.கூ. தலைவரைச் சந்தித்ததைத் தொடர்ந்து பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இருபக்க பேச்சுவார்த்தை 16 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் 2011 இல் மீண்டும் தொடங்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் பதில் கருத்துக்கு பதிலாக முன்னைய 5 முன்மொழிவுகளையிட்டு பேசவேண்டும்.

த.தே.கூட்டமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டதும் த.தே.கூ. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சேரும். ஆயினும் மேற்கூறிய ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசாங்கம் ஜனவரி மாதம் 2012 இல் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறியது. இலங்கை அரசாங்கத்தின் பிடிவாதப்போக்குக் காரணமாக ஸ்தம்பித நிலையை உடைப்பதற்கான 2 முயற்சிகள் தோல்வி கண்டன.

ஸ்தம்பித நிலை இன்றுவரை தொடர்கின்றது. பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துவிட்ட நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை இராணுவ ரீதியில் ஒடுக்குகின்ற வடக்கு, கிழக்கு பகுதிகளின் சனத்தொகை அமைப்பை மாற்றுகின்ற தனது வேலைத்திட்டத்தை ஆக்ரோஷத்துடன் தொடர்ந்து வருகின்றது.

இப்பின்னணியில் தான் ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் மார்ச் 2012 இல் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இதை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் பெரிதும் தவறிவிட்டது. 25 பெப்ரவரி 2013 இல் தொடங்கவுள்ள ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் 22 ஆவது அமர்வில் இலங்கை அரசாங்கத்தின் செயலின்மை மீது முக்கிய கவனம் செலுத்தப்படும்.

நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென நாம் நம்புகின்றோம். இப்பின்னணியில் தற்போது த.தே.கூ. தென்னாபிரிக்காவுக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தை சுட்டிக்காட்டி சில முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளதாக உலகத்துக்குக் காட்ட அரசாங்கம் முற்படுமென்பதை நாம் நன்கறிவோம். எனவே தென்னாபிரிக்காவின் முன்னெடுப்புத் தொடர்பில் எமது செயற்பாட்டுக்கும் இலங்கை அரசாங்கத்துடன் நாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்கும் தொடர்பில்லையென்பதை தெளிவுபடுத்த நாம் விரும்புகின்றோம்.

இத்தீர்மானத்துக்கமைய (இலங்கை அரசாங்கம்) நடக்கவும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் தீய நோக்கங்களை கைவிடச் செய்யவும் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவில் பொருத்தமான நடவடிக்கை மிக அவசியமெனவும் நாம் கருதுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞனை...

முறையிடப்பட்டுள்ளது. மேற்குறித்ததினம் தனது வீட்டிலிருந்து கடைக்குச் செல்வதாகக்கூறிச் சென்றவர் நேற்று வரை வீடுதிரும்பவில்லையென இளைஞனின் சகோதரர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## யுவதி எரிந்து மரணம்

எரியுண்ட நிலையில் 19 வயது யுவதியொருவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு ஒபபடைக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளை வித்தகபுரத்தைச் சேர்ந்த ஹம்சிகா என்ற யுவதியே எரிந்த நிலையில் மரணமடைந்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (25)

## வெட்டுப்புள்ளி...

ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஹனிகா ஹிரிம் புரேகம தெரிவித்துள்ளார். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பான வழக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி உயர நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. வழக்கு விசாரணைகளை அடுத்து வெட்டுப்புள்ளிகளை வெளியிட தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித துள்ளது. கடந்த வருடம் உயர்தரப் பரீடசையின் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவமும் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தலிபான்...

எம்.எம்.சுஹைர், தலிபான்கள் மற்றும் அல்கொய்தாவுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் உத்தேச தடையை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார். இப்படியான தடைச் சட்டங்களைப் பயன்படுத்தி சிறுபான்மையினரான முஸ்லிம்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படலாம் என்றும் அவர் கூறினார்.

சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளுடன், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருப்பதாகக் கூறிய அவர் இந்தச் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் பட்சத்தில், அது இவர்களுக்கு பாதகமாக அமையலாம் என்றும் இவை குறித்து தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## இந்திய...

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடததப்பட்ட கண்டனப்பேரணி முழங்காவில் பகுதியை வந்தடைந்த போதே பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முழங்காவிலில் இருந்து நாச்சிக்குடா வரையிலான இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இரணைமாதா நகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் இணைந்து தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். இரணை மாதா நகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன் இந்தப் பேரணி கூடியதை அடுத்து அங்கு ஒன்று திரண்ட ஆயிரக்கணக்கான மீனவர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மீனவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை மேற்படி போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பிடம் கையளித்தனர்.

## வடக்கில்...

கொடுத்தல் மற்றும் இதுவரை காலம் வழங்கப்பட்ட காணிகளை மீளப் பொறுப்பேற்றல் போன்ற சகல சந்தர்ப்பங்களிலும் வடமாகாண ஆளுநரின் விசேட அனுமதியை பெற்றே கொடுத்தல் மற்றும் மீளப்பெறவேண்டும் என்றும் ஆளுநரின் கையொப்பமிடப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாண அரச காணிகள் தொடர்பில் முறையாக ஒரு நடைமுறையை கையாளும் பொருட்டே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய மேற்படி நடைமுறையை கண்டிப்பாக கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸாரும் அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடரபில் இதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய அரச காணிகளை வாடகை, குத்தகை, அலுவலக செயற்பாடுகள், முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வழங்குபவர்கள் பிரதேச கிராமசேவகர், பிரதேச செயலர், அரசாங்க அதிபரின் ஊடாக தனது அனுமதியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த அவர், இவ்வாறு முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ள தவறும் பட்சத்தில் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக காட்டினார்.

இந்த நடைமுறை தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்ட செயலாளர்களுக்கும் தொலைபேசி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன். எதிர்வரும் 6 ஆம் திகதி ஆளுநர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு மேலதிக விளக்கங்களை வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடமாகாணத்தில் ஏற்கனவே வாடகை, குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணிகள் தொடர்பில் விரிவான விபரங்களை திரட்டி அது தொடர்பில் ஆராய்ந்து அவைகள் உரிய முறையில் வழங்கப்படாத இடத்து அது தொடர்பில் சரியான முறையை கையாண்டு தொடர்ந்தும் வழங்குவது தொடர்பில் தான் தீர்மானிக்கவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேற்படி நடவடிக்கையின் மூலமே அரச காணிகளின் பயன்பாடுகள் தொடர்பில் உரிய முறையில் கண்காணிக்க முடியும் என்றும் காணி விடயங்கள் தொடர்பில் எழும்பிய பிரச்சினைகளை கட்டுப்படுத்தவும் முடியும் என்றும் மேலும் தெரிவித்தார்.

# நல்லிணக்க முனைப்பை மேற்கொள்ள இலங்கை அரசு தவறிவிட்டது

## கனேடிய குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை அரசாங்கம் நல்லிணக்க முனைப்புக்களை மேற்கொள்ளத் தவறியுள்ளதாக கனேடிய குடிவரவு அமைச்சர் ஜேன் கென்னி தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அதிக கரிசனை எடுத்துக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். கனடாவின் ஒன்டாரியோவில் நடைபெற்ற தமிழ் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரம் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் புலம்பெயர் தமிழர்கள் அடிப்படைவாதக் கோட்பாடுகளை முன்னெடுக்க உந்தப்படுவர் எனவும், இது ஆபத்தானது எனவும் ஜேசன் கென்னி சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் அரசியல் நிலைமைகள் மேம்படுவதனை விடவும் அதிகளவில் மோசமாகிச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து



பிரதமர் ஹார்பருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பில் பிரதமர் தீர்மானிப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தும் சுமத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். அரசியல் காரணங்களை புறந்தள்ளி இறுதிக் கட்ட யுத்தத்தின் போது கனடா, இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருந்ததாகவும், அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தியதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக கனடாவிலிருந்து புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிதி வளங்களை முடக்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறெனினும் சில விடயங்களில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்ட விவகாரம் மோசமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து ஆட்சி செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# முப்பது வீத இலங்கையர் உடற்பருமனால் பாதிப்பு



இலங்கையின் சனத்தொகையில் 30 வீதமானவர்கள் உடற் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளமை ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

உடற்பருமன் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும் எனவும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு பணிப்பாளர் வைத்திய நிபுணர் தலத்தாலியனகே தெரிவித்துள்ளார்.

உயரத்திற்கு அமையவே இருக்க வேண்டிய நிறை குறித்து கவனம் செலுத்தும்போது நாட்டில் 30 வீதமானவர்கள் உடற் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கலரி அதிகமுள்ள உணவு வகைகளை மக்கள் அதிகம் உட்கொள்வதே இந்த நிலைமைக்கான காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்பருமனால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இருதய நோய் மற்றும் நீரிழிவு நோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு குறிப்பிட்டுள்ளது. மக்கள் அதிகளவில் கலரி அடங்கிய உணவு வகைகளை உட்கொள்ளப் பழக்கப்பட்டுள்ளமை சுகாதாரத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென வைத்திய நிபுணர் தலத்தா லியனகே மேலும் கூறியுள்ளார்.

# ஒலுவில் கடலில் தத்தளித்த 138 வெளிநாட்டவர்கள் மீட்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் கடல் பிரதேசத்தில் மீன்பிடிப்படகொன்றில் தத்தளித்த பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 138 ஆசிய நாட்டவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளனர்.



இவ்வாறு மீட்கப்பட்டவர்களில் 127 பேர் வங்கதேசத்தையும் ஏனைய 11 பேர் பர்மாவையும் சேர்ந்தவர்கள். இவர்களில் பெண் கள் மூவரும் சிறார் மூவரும் அடங்குவர்.

வங்கதேசப் பிரஜையொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவுக்கான பயணத்தை இவர்கள் மேற்கொண்டிருக்கலாம் என பொலிஸ் மற்றும் கடற்படை சந்தேகம் வெளியிடடுள்ளது. மரத்தினால் செய்யப்பட்டுள்ள இந்தப்படகில் பயணம் செய்தவர்கள் கடந்த 10 நாட்களாக ஒலுவில் கடலில் 50 மைல்களுக்கு அப்பால் தத்தளித்துக் கொண்டிருந்தவேளை, மீன்பிடி மற்றும் நீரியல் துறை ஊடாக மீனவர்களிடமிருந்து கிடைத்த தகவலொன்றின் பேரில அங்கு விரைந்த கடற்படையினரால் குறித்த நபர்கள் காப்பாற்றப்பட்டு ஒலுவில் மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததாகக் கடற்படை தகவல்கள் தெரிவித்தன.

தொடர்ந்து சில நாட்களாக உணவின்றி சோர்வும் மயக்கமும் அடைந்த நிலையில் இவர்கள் காணப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் சிலர் அக்கரைப்பற்று அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# தேரரை மரத்துடன் கட்டி பொருட்கள் கொள்ளை

விகாரையில் இருந்த தேரரை மரத்தோடு கட்டிவைத்துவிட்டு பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கெக்கிரிஓபட எனுமிடத்தில் இடம்பெற்றுள்ளது.

தேரரின் கையடக்கத் தொலைபேசி, பணம் மற்றும் வானொலி ஆகியனவே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மூவர் கொண்ட குழுவினரே தேரரை மரத்தோடு கட்டிவைத்துவிட்டு பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உண்மைகளை வெளியிட ஊடகங்களுக்கு அழுத்தம்

## என்கிறார் தம்பர அமிலதேரர்

அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாக ஊடகங்கள் உண்மைகளை வெளியிடுவதில்லை என காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் அமைப்பின் அழைப்பாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரித்துள்ளது.

61 வீதமான மாணவ, மாணவியர் பல்கலைக்கழகங்களுக்கு செல்லத் தகுதி பெற்றுள்ளனர்.

சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மாணவர்கள் தகுதி பெற்றுக் கொண்டுள்ள போதிலும், 25000 மாணவ, மாணவியருக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கப்படுகின்றது.

ஏனையவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல வேண்டும் என்ற காரணத்தினால் இவ்வாறு பெறுபேறுகள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா?

மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டிய தருணம் உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாக ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் உண்மையான செய்திகளை வெளியிடுவதில்லை.

அரசாங்கம் முக்கியமான காணி பூமிகளை பல்தேசிய நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றது.

99 ஆண்டு குத்தகை அடிப்படையில் இவ்வாறு காணிகள் வழங்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

# ஜெனிவா தீர்மான சவாலை வெற்றிகரமாக முறியடிப்போம்




## அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஜெனிவாவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு அஞ்சப் போவதில்லை என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். பதுரலிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தீர்மானம் குறித்த சவாலை வெற்றிகரமாக முறியடிக்கும் ஆற்றல் இலங்கையிடம் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான கேள்விகளுக்கு பதிலளிக்கும் பிரதிநிதிகள் குழுவிற்கு மகிந்த சமரசிங்க தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நீரிழிவு நோய் அதிகரிப்பு விவசாயிகளே காரணம்

## அமைச்சர் சிறிசேன தெரிவிப்பு



கிருமிநாசினிகளைக் கையாளும் முறை தொடர்பாக விவசாயிகளுக்குப் போதிய தெளிவில்லாத காரணத்தாலேயே நாட்டில் சிறுநீரக நோய் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி இப்பாதிப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க விசேட திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதற்கிணங்க கிருமிநாசினி விற்பனை, உபயோகம், கொள்வனவு செய்தல் போன்றவற்றிற்கு முறையானதிட்டம் வகுக்கப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தவும் வர்த்தமானியில் அதனை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் சில மாவட்டங்களில் நீரிழிவு நோய் பெரிதும் அதிகரித்துள்ளது. இதற்கு விவசாயிகளின் கவனயீனமே காரணம்.

கிருமிநாசினியை உபயோகித்துவிட்டு அந்தப் போத்தலை வயலில் ஒரு மூலையில் எறியும்போது அது நன்னீரோடு கலத்தல், உபயோகத்தின் பின் கையைக் கழுவாமல் உணவு உட்கொள்ளல், புகைபிடித்தல், மக்கள் குளிக்கும் இடத்தில் கிருமிநாசினி கான்கள், போத்தல்களை கழுவுதல் போன்ற அறியாமையான நடவடிக்கைகளே இப்பாதிப்புக்குக் காரணமாகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாய அமைப்புகளுக்கு இது விடயத்தில் சிறந்த தெளிவு ஏற்படுத்தவும் புதியசட்ட திட்டங்களை இது தொடர்பில் நடைமுறைப்படுத்தவும் துரித நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.